விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 27 ஞாயிற்றுக்கிழமை (13.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 329

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்ட்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க் குற்றம் புரிந்தோரை அரசாங்கம் பாதுகாக்காது!



## இந். தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி பரபரப்பு பேட்டி

(அட்டு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது, எந்தவொரு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டையும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் சுமத்தப்படுமானால், அவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும், எவரையும் பாதுகாக்க முற்படாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். மாலைதீவின் அட்டு நகரில் வைத்து இந்தியாவின் என்டிரிவி செய்தியாளர் மாயா மிர்சந்தனிக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## போதைப் பொருள் விவகாரம் பிரதான முகவர் அகப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாடசாலை மாணவர்களுக்கு ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்த பிரதான முகவரை நேற்று யாழ்.நகர் கொட்டடி பகுதியில் வைத்து யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இத்தகவலை யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகாரே தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.பாடசாலை மாணவர்கள் ஹெரோயின் போதைப்பொருட்களைப் பயன்படுத்துவது குறித்த தகவலின் அடிப்படை யில் யாழ். நகரில் உள்ள வீடொன்றில் வைத்து 8 மாணவர்களை கைது செய்தோம். அத்துடன் மேலும் இரு மாணவர்களையும் பின்னர் கைது செய்தோம்.

இம் மாணவர்கள் 10 பேரும் ஆரம்ப விசாரணைகளின்பின் யாழ்.மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தோம்.

இதன்போது ஐந்து மாணவர்களை பெற்றோரிடம் ஒப்படைத்தலுடன் ஏனைய 5 மாணவர்களை

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பெண்ணுக்கு சி.ஐ.டியினர் அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளித்திருந்த 45 வயதான விதவைப்பெண்ணான இரத்தினம் பூங்கோதை என்பவர் தற்போது குற்றப்புலனாய்வுத் துறையினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 27ஆம் திக்தி கல்முனையில் நடைபெற்ற ஆணைக்குழுவின் அமர்வில் 4 பிள்ளைகளின் தாயான இரத்தினம் பூங்கோதை சாட்சியமளித்திருந்தார்.

2007க்குப் பின்னர்–அதாவது தற்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலத்தின் போது சட்டவிரோதமான முறையில் தான் கடத்தப்பட்டு ஆயுதக்குழுவொன்றினால் தடுத்து வைக்கப்பட்டதாகவும் அதுபோல பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாயான எனது சகோதரி ஒருவர்

(19ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய விளையாட்டு விழாவை நடத்தும் வாய்ப்பை இழந்தது இலங்கை

(கொழும்பு)

2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுவிழாவை அம்பாந்தோட்டையில் நடத்தும் வாய்ப்பை இழந்தமை குறித்து இலங்கை ஏமாற்றம் தெரிவித்துள்ளது.

இப் போட்டிகளை நடத்துவதற்கான உரிமையை வழங்குவது தொடர்பாக பொதுநலவாய விளையாட்டு சம்மேளனத்தின் அங்கத்தவர்களிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 43-27 வாக்குகள் விகிதத்தில் அம்பாந்தோட்டை நகரை அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரம் வெற்றிகொண்டது. மேற்கிந்தியத்தீவுகள் பிராந்தியத்தைச் சேர்ந்த சென் கிட்ஸ் அன்ட் நேவிஸ் நாட்டில் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை இப்பெறுபேறு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப் பெறுபேறு குறித்து அம்பாந்தோட்டை 2018 பிரசாரக்குழுவின் தலைவரும் இலங்கை மத்தியவங்கி ஆளுநருமான அஜித் நிவார்ட் கப்ரால் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாய்ப்பை இழந்தமை ஏமாற்றமளிப்பதாக தெரிவித்தார்.

எனினும் அம்பாந்தோட்டையை பொருளாதார கேந்திர மையமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அவர் கூறினார்.

இலங்கையில் உற்சாகமான முற்போக்கான பயணத்திற்கு இப்பெருமையான விளையாட்டுப் போட்டிகள் ஒரு முக்கிய பகுதியாக இருக்கும் என

(20ஆம் பக்கம் பார்க்க)

## சொன்னதை சொன்னோம் சுமந்திரன் விளக்கம்

(கொழும்பு)

அமெரிக்க ராஜாங்கத்திணைக்கள அதிகாரிகளுடன் தாம் ஏற்கெனவே இலங்கையில் பகிரங்கப்படுத்தாத எந்தவிடயம் குறித்தும் கலந்துரையாடவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாங்கள் அங்கு சென்று இலங்கையில் ஏற்கெனவே சொல்லாத எதையும் சொல்லவில்லை.

(19ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் இடையூறின்றி தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெற்றிட



SINGER POWER ஜெனரேட்டர்கள்
இன்றே விரையுங்கள்.

Power 900
சக்தி : 900 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

Power 2000
சக்தி : 2000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 6.5/3600RPM

Power 3000D
சக்தி : 3000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

சங்கானை 077 2208232
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சுன்னாகம். 021 224 0555
நெல்லியடி. 021 226 4937
மானிப்பாய். 021 225 5343
சாவகச்சேரி 021 227 0197

சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஒரு இலட்சம் பெறுமதியான உபகரணம் பெற ஆயிரம் ரூபாய் கட்டாயம் செலுத்த வேண்டும்



(C-4964)

## கடற்றொழிலாளர்கள் கவலை கடற்றொழிலாளர் சங்கம் பதிலளிப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுக்கு ஒவ்வொரு பயனாளிகளிடம் இருந்தும் ஆயிரம் ரூபாய் பெறப்பட்டதாக பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

எனினும் விழா சிறப்பாக அமைய அனைவரினதும் சம்மதத்துடனேயே இப் பணம் பெறப்பட்டதாக கடற்றொழிலாளர்கள் சங்க தலைவர் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு உட்பட்ட வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஆளியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக ஒவ்வொரு சங்கத்திலிருந்தும் 40 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை அறிவித்திருந்தது.

இந்நிலையில் இந்த நிகழ்விற்கு மீள்குடியேற்ற அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் வருகை தரவுள்ளதால் அதனைச் சிறப்பாக செய்யவேண்டும் என்பதற்காகவும் அமைச்சர்களுடன் வருபவர்களுக்கு உணவு வழங்க வேண்டும் என்பதற்காகவும் ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பயனாளிகள் ஒவ்வொருவரிடமும் தலா ஆயிரம் ரூபாய் அறவிடப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் வழங்கப்படும் கடற்றொழில் உபகரணங்களை பெறவேண்டும் என்றால் கட்டாயமாக பணம் செலுத்தப்பட வேண்டும் எனவும் ஏற்பாட்டாளர்கள் பயனாளிகளிடம் தெரிவித்துள்ளனர்.

எனினும் விழாவை சிறப்பாக நடத்த வேண்டும் என்பதற்காகவே பயனாளிகளிடம் இருந்து பணம் பெறப்பட்டதாக வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம்.தங்கத்துரை தெரிவித்தார்.

ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதால் இந்த சங்கத்திற்கு உட்பட்ட பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிடம் இருந்து 500 ரூபாய் பணம் பெறப்பட்டது.

இதற்கு முன்பும் இந்தப் பயனாளிகளிடம் இருந்து கட்டுமரங்களை கடற்கரைக்குக் கொண்டு செல்லும் செலவிற்காக 500 ரூபாய் அறிவிடப்பட்டது.

விழா தொடர்பான ஏற்பாடுகளை செய்வதற்காக பயனாளிகளுடனும் கிராம சேவையாளருடனும் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடிய பின்பே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றியிருந்த பயனாளிகள் விழாவைச் சிறப்பாகச் செய்வதற்குப் பணம் தருவதாகக் கூறியிருந்தனர்.

இந்த விழாவைச் செய்வதற்கு 35 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் 20 ஆயிரம் ரூபாயே பயனாளிகளிடம் இருந்து பெறப்பட்டது. மீதி 15 ஆயிரம் ரூபாயை சங்கம் செலவு செய்வதாகப் பொறுப்பேற்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதனிடம் இது தொடர்பாக கேட்டபோது பயனாளிகளிடம் பணம் பெற்று நிகழ்வு நடத்த முடியாது. அவ்வாறு பணம் பெறப்பட்டிருந்தால்;சங்கம் மீளவும் அந்தப் பணத்தை பயனாளிகளிடம் கொடுக்க வேண்டும்.

பயனாளிகளிடம்பணம்பெறப்பட்டமைதனக்குத் தெரியாது என அவர் தெரிவித்தார். (எ-6)

## ஜனாதிபதி மகிந்த நாடு திரும்பினார்

(கொழும்பு)

சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளவென மாலைதீவு சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் நேற்று நண்பகல் நாடு திரும்பியுள்ளனர்.

மாலைதீவு சென்றிருந்த ஜனாதிபதி இந்தியப் பிரதமர் உள்ளிட்ட சார்க் நாடுகளின் அரச தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## அமைச்சர் டக்ளஸ் மீதான வழக்கின் இறுதி விசாரணை நவம்பர் 22 இல்!

### சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்பான விசாரணையை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு சென்னை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்னையில் 1986 மற்றும் 87ஆம் ஆண்டுகளில் தங்கியிருந்தபோது, சூளைமேடு காவல் நிலையத்தில் திருநாவுக்கரசு என்பவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற வழக்கும் ஏழு வயது சிறுவனைக் கடத்தி பணம் கேட்ட வழக்கு உள்ளிட்ட 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன. இதில், டக்ளஸ் தேவானந்தா தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த வழக்கின் மனுதாரரின் வழக்கறிஞர் இராதாகிருஷ்ணன் , நீதிபதிகள் நாகப்பா, சுதந்திரம் ஆகியோர் கொண்ட குழு முன் சிறப்பு கவனயீர்ப்பைக் கொண்டு வந்தார்.

அதில் உயர் நீதிமன்றத்தில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாலைதீவில் நவம்பர் 10ஆம் திகதியன்று நடந்த சார்க் மாநாட்டில் இந்தியப் பிரதமரைச் சந்தித்து தமிழகத்தின் மீனவர் பிரச்சினை உள்ளிட்டவை பற்றி ஆலோசனை செய்ததாக புகைப்படத்துடன் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளமை அதிர்ச்சி அளிக்கின்றது.

தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர் குறித்து, பிரதமருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால் இந்தியப் பிரதமர் அவரை சந்தித்திருக்கலாம். ஆனால் தேடப்படும் குற்றவாளி, சர்வதேச நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளார்.எனவே அவரை விசாரணைக்கு கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். இதையடுத்து, நீதிபதிகள் நாகப்பா, சுதந்திரம் ஆகியோர் வழக்கின் இறுதி விசாரணையை வரும் 22-ம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (ச-5)

## மண்டைதீவு வேப்பந்திடலில் நாளை பாலஸ்தாபனம்

வேப்பந்திடல் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 9.35 மணி முதல் 10.35 மணி வரை இடம்பெறும்.

இதனை முன்னிட்டு இன்று காலை 7.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை விசேடயாகபூசை வழிபாடுகள் இடம்பெறும்.

பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள், சிவஸ்ரீ க.ச.சோமஸ்கந்த குருக்கள், சிவஸ்ரீ பா.சபாரத்தினக் குருக்கள் ஆகியோர் நடத்தி வைப்பர்.

1990ஆம் ஆண்டு ஏற்பட்ட இடம்பெயர்விற்கு பின்னர் இவ்வருடம் பாலஸ்தாபனம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ந)

## நாட்டில் 30 வீதத்தினர் மனநோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் முப்பது சதவீதமானோர் மனநோயாளர்களாக இருப்பதுடன் இவர்களில் இரண்டு சதவீதமானோர் மனநோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அங்கொடை மனநல சுகாதார ஆய்வு நிலையத்தின் தலைவர் வைத்தியர் ஜெயமெண்டிஸ் தெரிவித்தார்.

இதனைத் தவிர மேலும் பத்து வீதமானோர் ஓரளவு மனநல பாதிப்புக்கு இலக்காகி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ-5)

## கொலையாளி இனங்காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் கந்தர்மடம் புகையிரத வீதியிலுள்ள வீடொன்றில் வைத்து பாடசாலை அதிபர் ஒருவர் மர்மான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளில் சூத்திரதாரிகள் இனங் காணப்பட்டுள்ளனர் என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகாரே தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் பல கோணங்களில் நடைபெற்று வருவதால் மேலதிக தகவல்களை வழங்கமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-5)

**REPAIRING**
Contact : 021-222 4459, 0774192275
சகலவிதமான கணனிகளும், இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
**NORTH LEAD**
Computer Sales and Service Center
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

**ENGLISH, SINHALA & COMPUTER CLASSES**
IELTS, SPOKEN ENGLISH வகுப்புக்கள்
வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஆங்கில (IELTS) வகுப்புக்கள் இலகு முறையில், கூடிய புள்ளிகள் பெற புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
சிங்கள வகுப்புக்கள்
பேச, எழுத, வாசிக்க பூரண தமிழ் விளக்கத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்.
கணனி வகுப்புக்கள்
MS Office, DTP, Internet & E-mail, Web & Graphic Designing, Hardware & Networking, Kids Programe, ICT, GIT, C,C#, Java, VB.Net etc... பூரண தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்
**NORTH LEAD**
EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

**கண்ணீர் அஞ்சலி**

**துரையப்பா ஜெயரட்ணம்**

(சென். ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட நிறைவேற்று உத்தியோகத்தரும், ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகரும்)

கடந்த 06.11.2011 அன்று காலமான சென். ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்

**துரையப்பா ஜெயரட்ணம்**



அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சென். ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட ஆணையாளரும், உத்தியோகத்தர்களும், அங்கத்தவர்களும்.

(6790)

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சிறிய குடும்பம் வசிக்கத்தக்க வீடு வாடகைக்கு தேவை.

T.P.: 077 9587091

(6786)

*என்றும், என்றைக்கும் யேசு பிரானின் புனித இதயம் போற்றப்பட்டும், ஏற்றப்பட்டும், நேசிக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் புனித இதயம் இரக்கம் கொள்ளட்டும். திக்கற்றவர்களுக்கு உதவுவரான புனித யூட் ஆண்டவரே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்*

*- அடியாள்*

(6785)

**காணி விற்பனைக்கு**

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையில் கட்டடங்கள், தொழிற்சாலைகளுக்கு ஏற்ற வகையில் அமைந்த 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு

0776138978

(C-4961)

# கலந்துரையாடல்

(மல்லாவி)

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் கல்வி பயின்று இடை விலகிய, ஒழுங்கற்ற வரவுடைய மாணவர்களின் வரவை அதிகரிக்கும் நோக்குடனான கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை பி.ப.2 மணிக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

துணுக்காய் கல்விக் கோட்டம், மாந்தை கிழக்கு கல்விக் கோட்டம் ஆகியவற்றில் உள்ள பாடசாலை அதிபர், கல்வி அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வினை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் ஆய்வினை தொடர்ந்து மாணவர் வரவினை அதிகரிக்கக் கூடிய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் துணுக்காய் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்துள்ளார். (அ-3-15)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(மருதங்கேணி)

மந்திகை வைத்தியசாலை, புலோலி ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்களுக்கு இக்கட்டாக்காலி நாய்கள் பெரும் இடையூறுகளை விளைவிக்கின்றன. இதனால் விபத்துக்கள் சம்பவிக்க நேரிடுவதாக அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட பிரதேச சபைகள் நடவடிக்கை எடுத்து இதனை கட்டுப்பாட்டினுள் கொண்டு வருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-35)

# துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தர தீர்விற்குமான செயற்றிட்டத்தினால் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவின் கிராம சேவையாளர் பிரிவுகளான அமைதிபுரம், கோட்டை கட்டிய குளம், அம்பலவன் பெருமாள் குளம், தென்னியன் குளம் ஆகிய மக்களுக்கான நடமாடும் சேவையொன்றினை துணுக்காய் பிரதேச செயலகத்துடன் இணைந்து நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணிவரை கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் துணுக்காய் பிரதேச செயலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத் திணைக்களம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சமூக சேவைகள் திணைக்களம், மாங்குளம் பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பால்நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், சிறுவர் பராமரிப்புத் திணைக்களம், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு, பிரதேச சபை ஆகிய நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கவுள்ளன.

இந்நடமாடும் சேவையில் மக்கள் பங்கேற்பதன்மூலம் தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியுமென முல்லைத்தீவு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்ட பிராந்திய நிகழ்ச்சித் திட்ட அதிகாரி இ.அமலன் அறிவித்துள்ளார். (அ-2)

# பண்பாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டு விழா-2011 எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

இதில் முதல் நாள் நிகழ்வுகள் பண்பாட்டுப் பேரவையின் உபதலைவரும் மேலதிக அரசாங்க அதிபருமான செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் முன்னாள் அரசாங்க அதிபர் என்.ஜெயநாதன் அரங்கில் நடைபெறும்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரான மு.சந்திரகுமார், கௌரவ விருந்தினர்களாக மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தி.இராசநாயகம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பூநகரி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் த.முகுந்தன், உதவி அரசாங்க அதிபர் திருமதி ப.ஜெயராணி, மாவட்டச் செயலகக் கணக்காளர் ப.ஜெயராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்குதல், மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (அ-2)

# இராசி பலன்

13.11.2011
(ஐப்பசி 27, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
திருதியை முழுவதும்
ரோகிணி பிற்பகல் 12.03 மணிவரை
இராகுகாலம் 4.37-6.07 மணிவரை
சுபநேரம் 9.07-10.37 மணிவரை

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும்.

**இடபம்** கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலையும் சூழ்நிலை அமையலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம்தேடி வரலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், ப்யண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் நாட்டம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் தோன்றுவதற்கான அறிகுறி தோன்றும், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு, பிறர் உங்களுக்கு உதவ முன்வருவர்.

**கன்னி** வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், பூமியால் இலாபம் கிடைக்கலாம், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறலாம்.

**துலாம்** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில். கட்டுப்பாடு தேவை, மறதியால் ஒருசில பணிகள் தடைப்படலாம், கௌரவக் குறைவான நாள்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், திடீர் பயணம் தித்திக்க வைக்கும்.

**தனுசு** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி வெற்றி தரும், உடல் நலம் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழில் மாற்றம் பற்றிய சிந்தனை தோன்றும்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்** நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தாய்வழி உறவினர்களால் ஏற்பட்ட தகராறுகள் அகலும், வாகன சுகமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர்.

வளவன்

# நினைவு தினம் அனுஷ்டிப்பு

இசை நாடகத் தந்தை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளை நினைவு கூறும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் கலாபூசணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சங்கீதபூசணம் சு.கணபதிப்பிள்ளை அறிமுகவுரையினையும் கலாபூசணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி நினைவுரையினையும் வழங்கவுள்ளனர். (அ)

## வாரம் ஒரு தகவல்

# அருள் வாக்கு

"நான் முடிவு செய்துவிட்டேன்"

"என் முடிவு?"

"அமைதியாக ஒரு ஆலமரத்தடியிலே உட்கார்ந்திருந்து அருள் வாக்கு சொல்ல தொடங்கலாம் என்று. அது என்ன அவ்வளவு சுலபமான காரியமா? தென் கரேலினாவில் அமைந்துள்ள ஆண்டர்சன் நகரத்திலே டென்னிஸ் என்ற 25 வயது இளைஞன் ஒருவனால் முடிந்தது என்றால் என்னால் முடியாதா?"

"அது எப்படி?"

"அவன் ஒரு பெண்ணை விரும்பினான்.... அந்தப் பெண் வீட்டிலே என்னென்ன பேசினார்கள் என்பதை மறுநாள் வந்து அப்படியே சொல்லுவானாம்"

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"கேட்டால் எனக்கு தெய்வீக அருள் இருக்கிறது என்று கூறுவானாம்! கடைசியிலேதான் உண்மை வெளிச்சத்திற்கு வந்தது"

"என்ன அது?"

"ஏற்கனவே அந்தப் பெண்களிடம் கடிகாரம் பதித்த ரேடியோ ஒன்றை பரிசாக கொடுத்துள்ளான். அந்தப் பெண்ணும் அதை படுக்கை அறையிலேயே வைத்துள்ளார்! அந்த ரேடியோவினுள்ளே ஒரு மைக்ரோஃபோன் இருந்தது. அதன் மூலமாக இவன் ஒட்டுக் கேட்டிருக்கிறான்! பெண் வீட்டில் கதைக்கப்பட்ட அனைத்து விடயங்களும் இவன் வீட்டிலே கேட்கக்கூடியதாக இருந்தது."

"கடைசியில் என்ன நடந்தது?"

"கம்பி எண்ணுகிறானாம் அந்த இளைஞன்"

"அதேமாதிரி உங்கள் நிலைமையும் மாறப்போகிறது"

"அது நடைபெறாமல் இருக்க நான் மிகவும் எச்சரிக்கையாக இருப்பேன்!"

"அது சரி! இப்படி திடீரென்று சாமியாராக மாற வேண்டும் என்று முடிவு செய்ததற்கு என்ன காரணம்?"

"கலியாணம் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டேன்..."

"அதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தையும் செய்தேன்... கடைசியில் அது நிறைவேறாமல் போய்விட்டது"

"ஏன் நிறைவேறாமல் போனது?"

"குறுக்கே வந்து நின்று தடுத்துவிட்டார்களே!"

"யார்?"

"என் மனைவி!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 75 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 190 | 150 |
| தக்காளி | 80 | 110 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 30 |
| கோவா | 35 | 60 | 40 |
| கரட் | 80 | 110 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 100 | 30 |
| வாழைக்காய் | 35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 75 | 60 | 80 |
| பாகற்காய் | 220 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக்கிழங்கு | 70 | 60 | 70 |
| பயற்றங்காய் | 100 | 110 | 90 |
| லீக்ஸ் | 30 | 40 | 30 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | -- | 130 | 90 |
| முருங்கைக்காய் | 30 | 90 | 50 |
| போஞ்சி | -- | 160 | -- |
| கத்தரி தம்புள்ள | 80 | 100 | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 40 | 20 |
| தேசிக்காய் | 220 | 160 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 30 |

# பிரித்தானிய பிரதமர் அலுவலகம் முன் முடிவடைந்த நீதிக்கான நடை பயணம்!

தமிழர்களின் நியாயமான விடுதலைப் போராட்டத்தை முன்னிறுத்தி பிரித்தானிய மக்களிடமும் பிரித்தானிய அரசாங்கத்திடமும் நீதி கேட்டு முன்னெடுக்கப்பட்ட நீதிக்கான நடை பயணம் லண்டனில் நிறைவடைந்துள்ளது.

பிரித்தானிய பிரதமர் அலுவலக வாசஸ் தலத்தின் முன் நிறைவுகண்ட இந்த நடை பயணம் மன்செஸ்டர் நகரில் இருந்து கடந்த மாதம் 10 ஆம் திகதி தொடங்கியிருந்தது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மக்கள் பிரதிநிதியான ஜெயசங்கர், முருகையா அவர்களோடு இந்த நடைபயணத்தில் குமார், சிவச் சந்திரன், தேவன் ஆகிய விடுதலைச் செயற்பாட்டாளர்களுடன் அயர்லாந்து நாட்டவரான பொல் அவர்களும் இணைந்திருந்தார்.

நடைபயண செயல் வீரர்களை பெருந் திரளானவர்கள் ஒளிவிளக்கேந்தி வரவேற்றனர். ஐந்து கோரிக்கைகள் அடங்கிய நீதிக்கான நடைபயண மனு பிரதமர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட் தந்தை இம்மானுவேல், பிரித்தானிய தமிழர் பேரவைத் தலைவர் சுகந்தகுமார், அரசியல் ஆய்வறிஞர் பி.ஏ.காதர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரித்தானிய கிளைப் பிரதிநிதி கலாநிதி ரவி, ஊடகவியலாளர் தினேஸ், கறோ நகரசபை உறுப்பினர் சுரேஸ் கிருஸ்ணா, மனிதநேய தமிழர் அமைப்பு பிரதிநிதி சேனன், பிரித்தானிய தமிழர் ஒன்றிய இணைப்பாளர் ரஞ்சன், தமிழ் இளையோர் அமைப்பு பிரதிநிதி விமல், தமிழர் அமைப்பு பிரதிநிதி ஞானம், அக் நௌவ் பிரதிநிதி ரிம் மார்டீன் ஆகிய அமைப்பு பிரிதிநிதிகளும் உரை நிகழ்த்தினர்.

நா. த.அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரனின் உரையினை துணைப்பிரதமர் உருத்திராபதி சேகர் அவர்கள் வாசித்தார்.

நீதிக்கான நடைபயணத்தின் ஐந்து கோரிக்கைகள் வருமாறு,

- ஈழத்தமிழர்களின் மீதான இலங்கை அரசின் இனப்படுகொலையையும் போர்க் குற்றங்களையும் மானுடத்திற்கு எதிரான குற்றங்களையும் விசாரிப்பதற்காக ஒரு சுயாதீனமான நீதியான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.
- ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதோடு தமிழீழத்தில் சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்துடன் கூடிய ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும்.
- ஈழத்தமிழர்களை ஒரு முற்றான இன அழிப்பிலிருந்து காப்பாற்றும் முகமாகவும் இலங்கையில் நடைபெறும் சம்பவங்களை ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வரும் ஈழத்தமிழர்களுக்கு நிவாரணமளிக்கும் முகமாகவும் தமிழ் ஈழத்தில் ஈழத்தமிழர்களின் தனியாட்சி உரிமையினை அங்கீகரிக்க வேண்டும்.
- இலங்கையில் கொடுஞ்சிறைகளினுள்ளே அடைபட்டு துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து ஈழத்தமிழ் பொதுமக்களும் முன்னாள் போராளிகளும் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும்.
- இலங்கை அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்படுவதோடு அனைத்து ஈழத்தமிழர்களும் அவர்களது சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படல் வேண்டும். (அ-2)

## கலைநிலா அரங்க நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் அக்கல்லூரியில் நுண்கலைப்பாடங்களை பயிலுகின்ற மாணவர்களின் கலைத்திறன்களை வெளிக்கொணரும் முகமாக மாதந்தம் நடத்தப்பட்டு வருகின்ற கலை நிலா அரங்க நிகழ்வின் இம் மாதத்திற்கான நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், சிறப்புவிருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி பத்மாவதி கஜேந்திரதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். அத்துடன் இம்மாத கலை நிலா அரங்கின் சிறப்பு அம்சமாக கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவர்களின் 3 நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன. (அ-2)

## எதிர்காலத்தைக் காட்டும் கொண்செப்ட் வீடியோ

(கொழும்பு)

தொழில்நுட்பமானது நாளுக்கு நாள் நாம் நினைக்காத அளவு அரசு வேகத்தில் வளர்ச்சியடைந்துவருகின்றது. இதில் மணிக்கொரு புதுமையை மனிதன் நிகழ்த்தி காட்டுகின்றார்.

மேலும் அதற்கு ஒருபடி மேலே போய் எதிர்காலம் இவ்வாறுதான் இருக்கப்போகின்றது என்பதைக் காட்டவும் செய்கின்றான்.

குறிப்பாக பெரிய நிறுவனங்கள் தங்களது எதிர்கால உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம் இவ்வாறுதான் இருக்கப்போகின்றது என்பதைக் காட்டவும் செய்கின்றன. இவை நிறுவனங்களுக்கு விளம்பரமாகவும் அமைகின்றன.

இவ்வாறு காட்டுவதற்கு தயாா்படுத்தப்படும் காணொளிகள் பொதுவாக கொண் செப்ட் என அழைக்கப்படும்.

இவ்வகைக் காணொளிகள் பல உள்ள போதிலும் குறிப்பிடத்தக்க சில சுவாரஸ்யமான காணொளிகளின் தொகுப்பே இக் கொண்செப்ட் வீடியோ.

நொக்கியாவினால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள அடுத்த தலைமுறையினருக்கான கையடக்கத்தொலைபேசி தொடர்பானதே இக் காணொளி.

நெனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்படும் கையடக்கத்தொலைபேசி இதுவாக இருக்குமென நொக்கியா தெரிவித்துள்ளது. (அ-2)

## அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் இலங்கை வரவுள்ளார்

காலி நகரில் அடுத்தவாரம் நடைபெறவுள்ள கடல்சார் பாதுகாப்பு கருத்தரங்கில் பங்கேற்க அமெரிக்கப் பாதுகாப்பு திணைக்களத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவுக்கான பிரதி உதவிச் செயலாளர் றொபேட் ஸ்கெர் விஜயம் செய்யவுள்ளார்.

இந்த இரண்டு நாட்கள் கடல்சார் பாதுகாப்பு கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலியில் உள்ள வெளிச்ச வீட்டு விடுதியில் ஆரம்பமாளகவுள்ளது.

முதல்நாள் கருத்தரங்கில் அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்கள பிரதி உதவிச் செயலாளர் றொபேட் ஸ்கெர், பூகோள மற்றும் பிராந்திய கடல்சார் பாதுகாப்பில் பொதுவான மூலோபாயத்தின் முக்கியத்துவம் என்ற பொருளில் ஆய்வு ஒன்றினை சமர்ப்பிக்கவுள்ளார்.

ஆசிய விவகாரங்களில் நிபுணரான இவர் முன்னதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் பணியாற்றியிருந்தார். இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் உரையாற்றவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலி கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜப்பான், பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இந்தியா, பிரித்தானியா, சீனா, அமெரிக்கா, மாலைதீவு, ஐக்கிய அரசு எமிரேட்ஸ், பங்களாதேஷ், கென்யா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், தென்கொரியா, இந்தோனேசியா, மலேசியா, ஓமான், கட்டார், ஆகிய நாடுகள் பங்கேற்கவுள்ளன.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் அது சார்ந்த சவால்கள் குறித்த ஆய்வுகளை இந்தியா, அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளை சமர்ப்பிக்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாவது நாள் அமர்விலும் அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த பிரிகேடியர் ஜெனரல் மைக்கேல் கிலென் கொம்ரன் ஆய்வு ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார். (அ-2)

## மண்டப முகாமில் அகதி தகராறு; பொலிஸார் கடுமையான தாக்கு

மண்டபம் அகதிகள் முகாமில் போதையில் பொலிஸாரிடம் தகராறு செய்த இலங்கை அகதியை பொலிஸார் தாக்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கைப் பேசாலையைச் சேர்ந்த நீலன் மண்டபம் அகதி முகாமில் தங்கியுள்ள இவர் கடந்த புதன்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் மூன்று பேருடன் அகதிகள் முகாமுக்குள் விசிலடித்தபடி நுழைந்தார். இதன்போது அங்கே காவலுக்கு நின்ற பொலிஸ் அதிகாரி மோட்டார் சைக்கிளில் வந்த மூவரையும் தடுத்தபோது இருவர் தப்பி ஓடி விட்டனர். நீலன் மட்டும் போதையில் அவரிடம் தகாதவார்த்தைகளில் பேசி தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் இருவருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது காவலுக்கு நின்ற ஏனைய பொலிஸார் நீலனை தாக்கினர். இதனிடையே முகாமில் இருந்த ஏனைய அகதிகள் பொலிஸாரின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

காயமடைந்த நீலனுக்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை வழங்கிய பின் முகாமுக்கு கொண்டு சென்றனர். இது குறித்து கியூ பிரிவு புலனாய்வு துறையினர் விசாரித்து வருகின்றனர்.


முகாம் அதிகாரி ஒருவர் கூறும்போது, அகதிகளுக்கு நல்ல சலுகைகள் அரசு வழங்கி வரும் நிலையில் அகதிகள் அதை தவறாக பயன்படுத்தி குடிபோதையில் அரசு அதிகாரிகளிடம் தகராறில் ஈடுபடுகின்றனர். தட்டி கேட்கும்போது தாக்கிவிட்டதாக பிரச்சினை எழுப்புகின்றனர் என்றார். (அ-2)

## முல்லை.மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பேர் மீளக்குடியமர்வு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை ஒரு இலட்சத்து 70 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் 3ஆயிரத்து 468 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து653 பேரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரத்து580 குடும்பங்களைச் சேர்ந்த 8ஆயிரத்து 91 பேரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 5 ஆயிரத்து 249 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 697 பேரும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 10 ஆயிரத்து 646 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 566 பேரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆயிரத்து 851 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 059 பேரும் வெலி ஓயா பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரத்து 954 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 004 பேரும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். (அ-2)



யாழ். கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட சிறுவர் மகிழ்வக முறைசாராக் கல்விப் பிரிவினரின் கண்காட்சி -2011 கோப்பாய் வடக்கில் அமைந்துள்ள மகிழ்வகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் கண்காட்சியினை திறந்து வைத்து பார்வை யிடுவதையும் படங்களில் காணலம்.

# முஸ்லிம், தமிழ் சமூகங்களுக்கிடையில் நல்லுறவு கட்டியெழுப்பப்பட வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் நிலவும் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் சீர்குலைப்பதற்கு அரசியல்வாதியெனத் தம்மைக் கூறிக் கொள்ளும் குறுகிய நோக்கம் கொண்ட எவருக்கும் இடமளிக்கக்கூடாது என நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி பிரதேசத்தில் தரமுயர்த்தப்படும் புதிய மீராவோடை தபால் அலுவலகத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெற்ற மீராவோடை புதிய தபால் அலுவலகத்திறப்பு விழா நிகழ்வில் அமைச்சர் ஹக்கீம் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

நான் 2007 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய அரசாங்கத்தில் தபால் அமைச்சராக பதவி வகித்த போது மீராவோடை உபதபால் நிலையத்தை தரமுயர்த்துவதற்கும் புதிய கட்டடத்தை நிறுவுவதற்கும் ஏற்பாடுகளைச் செய்து நிதி ஒதுக்கீட்டையும் செய்திருந்தேன். அதனடிப்படையில் இந்த புதிய கட்டடத்தை உத்தியோகபூர்வமாகவும் சம்பிரதாயபூர்வமாகவும் தபால் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் ஆசீர்வாதத்துடன் உரிமையோடு திறந்து வைக்கின்றேன். இதற்கு உரிமை கொண்டாட இப்பிரதேசத்தைச் சேர்ந்த எந்த அரசியல்வாதிக்கும் அருகதையில்லை.

காணிப் பிரச்சினையொன்றைக் காரணமாக வைத்து சமுர்த்தி ஊக்குவிப்பாளர் கூட்டமொன்றில் பேசும் போது இப்பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை இனவாதம் பேசக் கூடாது என்றும் விளைவு பாரதூரமானது என்றும் அவர்களுக்கு உபதேசம் செய்திருக்கின்றார். அவ்வாறு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கீதோபதேசம் செய்ய அவர் யார்? பத்திரிகைகளில் அந்தச் செய்தி வெளிவந்திருக்கின்றது.

இன்று நாட்டில் ஒருசாரார் இன்னொரு சாராரை இனவாதிகள் என ஏட்டிக்குப் போட்டியாகக் கூறிக்கொள்வது வழக்கமாகிப் போய் விட்டது. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்மக்கள் பெரும்பான்மையினராக இருக்கின்றனர்.



அவ்வாறே அம்பாறை மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். ஒரு மாகாணத்திலோ மாவட்டத்திலோ பெரும்பான்மையாக வசிப்பவர்களில் அரசியல் அதிகாரமுடையவர்கள் அதனைக் கொண்டு அங்கு சிறுபான்மையினராகக் இருக்கும் மக்களுக்கும் பயனளிக்கும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். இதில் இதய சுத்தியோடு அவர்கள் ஈடுபட வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் உயிரோட்டமுள்ளதாகப் பேணுவதற்கு நாமனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். (அ-2)

## பருவ இதழ் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

சமகால பொது அறிவு தொகுப்பு விடயங்களைத் தாங்கிய மாதாந்த பருவ இதழ் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் செல்வி. கீர்த்திகா தருமராஜாவின் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை யாழ். பல்கலைக்கழக இறுதி வருட மாணவன் வி. நவநீதன் ஆற்றுவார். அதனைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் த.தவசேகர் முதற் பிரதியை வழங்குவார்.

அத்துடன் ஏற்புரையையும் நன்றியுரையும் யாழ். மாநகரசபை இந்து கலாசார கிளை நூலகத்தின் நூலகர் சி.என்.எச். சாள்ஸ் நிகழ்த்துவார். (அ-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர முத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதனால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (2)

# சிங்கள குடியேற்றத்திற்கான ஆரம்ப நாடகமே அரச அதிபர்கள் இடமாற்றம்

(கொழும்பு)

நூறுவீதம் தமிழ்பேசும் மக்கள் வாழும் மன்னார் மாவட்டத்தில் அரசாங்கம் திட்டமிட்டு சிங்கள இனத்தை சேர்ந்த ஒருவரை அரசாங்க அதிபராக நியமித்துள்ளமை அரசாங்கத்தின் அத்துமீறிய சிங்கள குடியேற்றத்தை மேற்கொள்ளும் நாடகத்தின் ஆரம்பமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் சாடியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கு-கிழக்கில் சிங்கள மயமாக்கும் பணியை அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளது. முன்னர் அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கான அரசாங்க அதிபர்களாக பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்தவர்களை நியமனம் செய்த போது நாம் ஆட்சேபனை தெரிவித்தோம். அப்போது அரசாங்கம் மூவின மக்களும் வாழும் மாவட்டமாக மேற்படி மாவட்டங்கள் உள்ளதாக நொண்டிச் சாட்டுக்களைக் கூறியது. ஆனால் இன்று முற்றுமுழுதாக தமிழ் பேசும்மக்கள் வாழும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக பெரும்பான்மை இனத்தை சார்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு அரசாங்கம் என்ன பதில் கூற முடியும்.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு சிங்களவர்களாக உள்ள அரசாங்க அதிபர்களை நியமிக்க வேண்டாமென நாம் பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறியிருந்தோம். இவை தவிர பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடமும் இதனை வலியுறுத்திக் கூறினோம். ஆனால் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள்ளை கிடப்பில் போட்டு விட்டு தாம் நினைத்ததை செய்யும் பணியை முன்னெடுத்துள்ளது. இதிலிருந்து அரசாங்கத்தின் கடும் போக்கான தன்மையை உலகம் அறிந்து கொள்ளும் என்றார். (அ-2)

# வீதி புனரமைப்பு

(பருத்தித்துறை)

வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் உள்ளக வீதி 10 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இப்புனரமைப்பு வேலை கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் மேற்குறித்த கல் லூரி இராணுவ கட்டுப்பாட்டுக்குள் நீண்ட காலம் இருந்த போது இவ் உள்ளக வீதியானது பெரும் சேதமடைந்து காணப்பட்டது.

ஆயினும் இவ் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் பாடசாலை சமூகத்தினர் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.

இதனைக் கருத்திற்கொண்டு மேற்குறித்த திணைக்களத்தால் இவ்வீதியானது மிக விரைவில் புனரமைக்கப்படவுள்ளது. (அ-3-10)

# முகாமைத்துவ பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் முகாமைத்துவப்பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்திபெற்ற அனைவரும் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். அது மட்டுமன்றி எமது பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் ஒரு அடிப்படைக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவர்களும் மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலா்ம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

---

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் சட்டமாணிப்பட்டக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க்.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்திபெற்ற அனைவரும் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். அதுமட்டுமின்றி எமது பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் ஒரு அடிப்படைக் கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்களும் மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்:பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மரண அறிவித்தல்



## இராசா தம்பிஜயா

முதலியார் வளவு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசா தம்பிஜயா 12.11.2011 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா- பாலமணி ஆகியோரின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- பூமணியின் மருமகனும், தங்கரத்தினத்தின் (ரதி) அன்புக் கணவரும், கோசலாதேவி (சுவிஸ்), வாமதேவன் (அதிபர், யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை) கௌசலாதேவி , மீராதேவி (நெதர்லாந்து), கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாகாந்தன் (சுவிஸ்), தேன்மொழி (ஆசிரியர், யா/ மகாஜனாக் கல்லூரி), சிறிகுலராசா, பரமலிங்கம் (நெதர்லாந்து) சுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஐங்கரன், லாவண்யா, காருண்யா, தசாகரன், ரிசபன், யாழவன், சானுசா, நிசனன், பதுசனன், நிதிசன், அஸ்வினி, சுபர்னன், பிருந்தாவனா, மிதுர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.11.2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்களுக்காக அன்னாரின் பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரதி தோட்டம்,முதலியார் வளவு,
கே.கே.எஸ். றோட்,
சுன்னாகம்.

தகவல் த.வாமதேவன்
(மகன்)
(அதிபர், யா/ஏழாலை வடக்கு
அ.மி.த.க பாடசாலை)

# ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானவுடன் தாம் யாரையும் பாதுகாக்க வேண்டியதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை எதிர்வரும் 19 ஆம் திகதி தாம் கையேற்கவுள்ளதாக என்.டி.டீவி. உடனான செவ்வி ஒன்றின் போது ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆகைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் அது பகிரங்கப்படுத்தப்படுமா என்று ஜனாதிபதியிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டவுடன் அதனை பகிரங்கப்படுத்துவதற்கு முன்னதாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அதன் பின்னரே அந்த அறிக்கை பகிரங்க ஆவணமாக மாறும் என்றும் கூறினார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்த அறிக்கையில் குற்றச் சாட்டுக்கள் இருக்கலாம் என்ற அச்சம் நிலவுகின்றதா என என்.டி.டீவி சார்பாக வினவப்பட்டதை அடுத்து அது குறித்து தாம் கவனத்தில் எடுக்க வில்லை என ஜனாதிபதி பதிலளித்தார்.

அத்தகைய குற்றச்சாட்டு முன்வைக்கப்படுமாயின் அது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தாம் எவரையும் பாதுகாக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அனைவரும் கடைசி 10 நாட்கள் தொடர்பாகவே பேசுகின்றனர் எனவும் கடந்த 30 வருடங்கள் தொடர்பாக எவரும் பேசுவதில்லை எனவும் இதன்போது தெரிவித்த ஜனாதிபதி, ஆனால், 30 வருடங்களாக என்ன நடந்தது எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள்? என்று கேள்வி எழுப்பினார்.

எத்தனை தமிழ் அரசியல்வாதிகள் கொல்லப்பட்டார்கள் என மேலும் வினவியதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளினால் இந்திய முன்னாள் பிரதமர் கூட கொல்லப்பட்டதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (அ-2)

## நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தாதிய உத்தியோகத்தர், குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் தலைமையில் நடைபெறும்.

இதில் பயிற்சியை முடித்து புதிதாக நியமனம் பெற்ற தாதிய உத்தியோகத்தர் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கே நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளது.

எனவே, நியமனக்கடிதம் பெறும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ-2)

## நோர்வே 366 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியது

(கொழும்பு)

1997ஆம் ஆண்டுமுதல் 2009ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் நோர்வே 366 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை சமாதான முனைப்புக்கள் குறித்து நோர்வே வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், நோர்வே மற்றும் இலங்கைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நிதியுதவி வழங்கப்பட்ட பெரும்பான்மையான இலங்கைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உரிய முறையில் பணத்தைப் பயன்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு 60 மில்லியன் நோர்வே நோக்குகள் வழங்கப்பட்டுள்ளன. மிலிந்த மொறகொட, ரணில் விக்ரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் நோர்வே சமாதான முனைப்புக்களில் முக்கியம் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட மொறகொட ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இலங்கை வெளிவளத் திணைக்களத்திற்கு 3 இலட்சம் மில்லியன் நோக்குகளும் இலங்கை அரசாங்கத்திற்கு 7 ஆயிரம் மில்லியன் நோக்குகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்திற்கு 18ஆயிரம் மில்லியன் நோக்குகள் வழங்கப்பட்டுள்ளன. சர்வோதய மற்றும் சேவாலங்கா ஆகிய தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களுக்கும் இவ்வாறு பணம் வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

## இலங்கையிலிருந்து தங்கம் கடத்திய கார் பிடிபட்டது



இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு கடத்தி வரப்பட்ட தங்கக் கட்டிகளுடன் வந்த கார் சுங்கத்துறை அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டது. இதில் காரின் ஆசனத்திற்கு அடியில் பதுக்கி வைத்திருந்த 156 தங்கக்கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதன்மதிப்பு நான்கரைகோடி ஆகும். இதுபோன்ற அதிகபட்சம் தங்கம் நாகை வட்டாரத்தில் சிக்கியது இதுவே முதன்முறையாகும்.

சென்னைக்கு நாகப்பட்டினம் வழியாக தங்கக் கட்டிகள் கடத்திவரப்படுவதாக கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு தகவல் வந்தது. இதனையடுத்து கஸ்டம்ஸ் அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். இதில் சோதனை நடத்தப்பட்டதில் காரின் ஆசனத்திற்கு அடியில் தங்கக் கட்டிகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. மொத்தம் 15 கிலோ 600 கிராம் எடை கொண்ட 156 தங்கக் கட்டிகள் இருந்தன. இதனை அதிகாரிகள் பறிமுதல் செய்ததுடன் காரில் இருந்த கோடியக் கரையை சேர்ந்த ஆனந்த் மற்றும் சாரதி வேதையனை பொலிஸார் கைது செய்தனர். (அ-2)

## மீனவர்கள் தாக்கப்படுவதை மத்திய அரசு வேடிக்கை பார்க்காது

### அமைச்சர் வி. நாரயணசாமி

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்களுக்கு இனி பாதிப்பு நேர்ந்தால் மத்திய அரசு வேடிக்கை பார்க்காது என் மத்திய பிரதமர் அலுவலக இணை அமைச்சர் வி.நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என மாலைதீவில் நடந்த சார்க் மாநாட்டின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை கடல் பகுதியில் அந்நாட்டுக் கடற்படையினர் கூடுதலாக ரோந்துப் பணி மேற்கொள்வது போல இந்திய கடல் பகுதியிலும் நமது கடற்படையினர் கூடுதல் ரோந்துப் பணி மேற்கொள்ள மத்திய பாதுகாப்புத் துறை ...மச்சரிடம் ...பசி நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் மூலம் தமிழக கா...க்கால் மீன ,வர்கள் தாக்கப்படுவதும் ...வர்களின் உடைமைகள் பறிபோவதும் தடுக்கப்படும்.

கூடங்குளம் பிரச்சினை, கூடங்குளத்தில் அணு உலையைத் தொடங்குவது தொடர்பாக போராட்டக் குழுவினர் சில சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். அவர்களின் சந்தேகங்களுக்கு விஞ்ஞானிகள் குழு பதில் தயாரித்து அடுத்த வாரத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் போது தெரிவிக்கும். அடுத்த மாத இறுதிக்குள் மத்திய, மாநில அரசுகளின் குழுவினர் போராட்டக் குழுவினரிடம் பேச்சுவார்த்தை நடத்துவது நிறைவு பெற்று சுமுக முடிவு எட்டப்படும்.

பொட்டாஷ் உரம் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். ஜோர்தான் போன்ற நாடுகளில் உள்ள சுரங்கங்களிலிருந்து அதற்கான மூலப் பொருளை இந்தியாவுக்கு இறக்குமதி செய்ய மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இது நடைமுறைக்கு வந்தால் விலை உயர்வு கட்டுப்படுத்தப்படும் என்றார். (அ-2)

## இலங்கையர் நால்வருக்கு 10 ஆண்டுகள் சிறைவாசம்

(கொழும்பு)

சமையல் எரிவாயு சிலிண்டரின் ஊடாக போதைப் பொருட்களை கடத்த முற்பட்ட நான்கு இலங்கையர்களுக்கு இந்திய நீதிமன்றம் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது.

காமினி, மொஹமட் சரீப், சுரேஸ்ராஜா மற்றும் குணசேகரன் ஆகிய நால்வருக்கும் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களுக்கு தலா 15 இலட்சம் இந்திய ரூபாய் அபராத பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த 2006 ஆம் ஆண்டு ஒப்டோபர் மாதம் 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

4.15 கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருட்களை எரிவாயு சிலிண்டரினுள் வைத்து கடத்திச் செல்ல முற்பட்ட வேளையில் அவர்கள் நால்வரும் கைதாகினர்.

போதைப் பொருட்களை தமிழகத்தில் இருந்து கீழக்கரை கடத்த முற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் புழல் சிறையில் தடுத்து வைக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## பேராதனை பல்கலையில் துப்பாக்கி, ரவைகள் மீட்பு!

(கொ்ழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதி ஒன்றிலிருந்து ரி-56 துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் இரண்டினையும் பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர். குறிப்பிட்ட விடுதியில் மூன்று மாணவர்கள் தங்கியிருந்துள்ளனர். பின்னர் இவர்கள் அவர்களுக்கான பரீட்சை முடிவடைந்ததையடுத்து சில வாரங்களுக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து புதிய மாணவர்கள் குறிப்பிட்ட அறையைப் பொறுப்பேற்று அதனைத் துப்புரவு செய்த போதே ரி-56 துப்பாக்கியும் இரு ரவைகளும் அந்த அறைக்குள் காணப்பட்டுள்ளன.

இது குறித்து பெரதெனிய பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் அவற்றினைக் கைப்பற்றியதுடன் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# போதைப் பொருள் கடத்தும் கேந்திர நிலையமாக இலங்கை தொழிற்படுகிறது

## போதைப் பொருள் கட்டுப்பாட்டுச்சபை

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளுக்கான மையமாக இலங்கை செயற்படுகின்றது என தேசிய ஆபத்தான போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

ஐரோப்பா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையில் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கேந்திர நிலையமாக இலங்கை செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு போதைப் பொருளை கடத்துவதற்கு இலங்கை பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தலைநகர் கொழும்பு மற்றும் மாலைதீவின் தலைநகர் மலே ஆகிய நகரங்கள் இடைத்தங்கல் மையங்களாக செயற்படுகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறவுண் சுகர் எனப்படும் போதைப் பொருள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 58 வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 25 பேர் பாகிஸ்தானியர்கள் எனவும் நான்கு பேர் இந்தியர்கள் எனவும் ஆறு பேர் மாலைதீவு பிரஜைகள் எனவும் ஐந்து பேர் ஈரானியர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2010 ஆம் ஆண்டில் மட்டும் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 25 வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காலப் பகுதியில் 58 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் 4 கிலோ கிராம் கொக்கேய்ன் போதைப் பொருளும் கடத்தப்பட்டுள்ளன.

போதைப் பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படும் முக்கிய மூலங்களான மருந்துப் பொருட்களும் அதிகளவில் கடத்தப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஆண்டில் ஒரு கிலோ ஹெரோயின் போதைப் பொருளின் சந்தை விலை 4.3 மில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ கஞ்சா போதைப் பொருளின் விலை 12 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# பதுளையில் விபத்து; 23 பேர் காயம்

(கொழும்பு)

பதுளை கொட்டியாகல வழியாக வெல்கெலே நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் கொட்டியாகல பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 23 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 9 பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குகின்றனர். பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு நிரந்தரமாக இருக்க வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வு தற்காலிகமான தீர்வாக இருக்கக் கூடாது என்பதனால் தமிழ் தலைவர்களினதும் பொது இணக்கப்பாட்டுடன் தீர்வு காணும் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் வழங்கியுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் அண்மையில் சமய தலைவர்களை சந்தித்த போதே ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

30 வருடங்கள் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் துரிதமான தீர்வை வழங்குவது இலகுவான காரியமல்ல எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார். வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தற்காலிக தீர்வு வழங் குவது பலனை தராது. அத்துடன் இந்த விடயம் சம்பந்தமாக தமிழ் கட்சித் தலைவர்கள் மத்தியில் பொது இணக்கம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது அத்தியாவசியமானது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சர்வதேச முதியோர், சிறுவர் தின விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அரச அதிபர் பிரிவினால் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கல்வன் பாடசாலையில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வை. செல்வராசா, சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா, பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் செ.தர்மராஜா, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினருமான ஜ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் க.கண்ணதாசன், மருதங்கேணி ஜே/428 கிராம அலுவலர் மூ.வ. தவராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சிறுவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (அ-2)

# லக்ஸ்மன் செனவிரத்னவை கட்சியிலிருந்து வெளியேற்ற இடைக்கால தடை விதிப்பு

(கொழும்பு)

அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்னவை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றுவதையும் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வதைத் தடுக்கும் வகையிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அமைச்சர் செனவிரத்ன தாக்கல் செய்திருந்த மனுவை பரீசிலனைக்கு எடுத்துக் கொண்ட கொழும்பு மாவட்ட நீதிபதி ரஞ்சித் என்.வத்துபொல இந்தத் தடை உத்தரவை பிறப்பித்தார்.

லக்ஸ்மன் செனவிரத்ன ஐக்கிய தேசியக் கட்சிக்காக சேவையாற்றிய ஒருவர் என அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அலி சிப்ரி சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அந்தக் கட்சியை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதற்கான எத்தகைய அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத ஒருவர் எனவும் அவர் தெரிவித்தார்.

18 தேர்தல்களில் தோல்வியடைந்த ரணில் விக்ரமசிங்க நாட்டினதும் கட்சியினதும் முன்னேற்றத்திற்காக எத்தகைய பங்களிப்பையும் வழங்காததால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பலத்த கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாக சட்டத்தரணி நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ஜனவரி 20 ஆம் திகதி பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தை பிரதிவாதிகளுக்கு வழங்குவதற்காக இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்த கொழும்பு மாவட்ட நீதிபதி ரஞ்சித் என்.வத்துபொல தெரிவித்தார். (அ-2)

# எந்தவிதமான அழுத்தங்களுக்கும் பணியாது அரசாங்கம் தனது கடமையை செய்யும்-பிரதமர்

(கொழும்பு)

எந்தவிதமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் அவற்றை மீறி இலங்கை அரசாங்கம் தமது கடமையை செய்யும் என பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் உலக நாடுகள் பலவற்றில் தற்போது இலங்கையை அவமானப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்கின்றனர். இந்த முயற்சிகளை கண்டு தாம் அஞ்சப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இலங்கையில் அவ்வாறான எவையும் நடைபெறவில்லை.

இலங்கையர் அனைவரும் ஒற்றுமையுடன் எதிர்கால சந்ததியினரின் அபிவிருத்தி நோக்கி வாழ வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# த.தே.கூட்டமைப்பை ஏக பிரதிநிதிகளாக கருத்தில் எடுத்துக்கொள்ள முடியாது

## பிரபாகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை இலங்கைத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக கருத முடியாது. அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முடியாது எனப் பாராளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு தமிழ்மக்கள் மற்றும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கவேண்டுமாயின் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பிரபாகணேசன் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கத்தூதுவராலய அரசியல் அதிகாரி ஜேகோப் சிக்குராயுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை மேலும் வலுப்படுத்துவதன்மூலம் நாட்டின் சகல பிரஜைகளினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட அரசியல்தீர்வுத் திட்டத்தில் இந்திய வம்சாவளித் தமிழர்களும் உள்ளடக்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

1.6 மில்லியன் இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் மட்டுமே தமிழ்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை எனவும் வடக்கு, கிழக்கு மக்களையும் இந்திய வம்சாவளி தமிழ்மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய பல கட்சிகளும் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை மட்டுமே இலங்கைத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாகக் கருதமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளித் தமிழர்களே அதிகளவில் பிற்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வாக்காளர் பட்டியலில் பெயரினை பதிவு செய்யுங்கள்-தேர்தல் செயலகம்

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் தமது பெயர் உள்ளடக்கப்படாதவர்கள் மாவட்ட தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தில் அது குறித்த விடயங்களை முன்வைக்குமாறு தேர்தல்கள் செயலகம் கேட்டுக் கொண்டுள்ளது.

2011 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவேட்டினை காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ. பீ.சுமனசிறி தெரிவித்தார்.

இதற்கமைய மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் என்பனவற்றிலும் தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களிலும் வாக்காளர் பதிவேடு காட்சிப் படுத்தப்படும் என அவர் கூறினார்.

2011 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவேடு இம்மாதம் 30 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இந்த காலப்பகுதியில் தமது பெயர் பிழையான முறையில் வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளவர்கள் அது குறித்து எழுத்து மூல முறைப்பாட்டை முன்வைக்க முடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

அடுத்த மாதம் முதல் முறைப்பாடுகளை கருத்திற் கொண்டு 2011 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் திருத்தங்களை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# பொதுநலவாய போட்டிகள் நடத்தும் தகைமையை இழந்த அம்பாந்தோட்டை

(கொழும்பு)

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டின் பொது நலவாய போட்டிகளை நடத்தும் வாய்ப்பை அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் வென்றுள்ளது.

அம்பாந்தோட்டைக்கும் கோல்ட் கோஸ்ட்டுக்கும் இடையில் இந்த போட்டியை நடத்துவது குறித்து போட்டி காணப்பட்டது.

இதுதொடர்பில் புனித கிட்ஸ் மற்றும் நேவிஸ் தீவுகளில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில் 70 பொதுநலவாய நாடுகள் வாக்களித்தன. அவற்றுள் 43 நாடுகள் கோல்ட் கோஸ்ட்டுக்கு ஆதரவாக வாக்களித்தன.

அம்பாந்தோட்டையில் இந்தப் போட்டியை நடத்த 27 வாக்குகள் மாத்திரமே வழங்கப்பட்டன. (அ-2)

# 180 ஆம் நாள் நினைவு மலர்கள்

## அமரர் செல்வி நிதர்சனா(நிதா) முருகானந்தராசா (ரவி)



(A/L, கணிதப்பிரிவு-2012)

பிறப்பு 17.05.1993 (திதி:-அபரபட்ச திருதியை) இறப்பு 17.05.2011

ஓடி முடிந்தது மூவிரண்டு மாதங்கள்-ஆயினும்
ஆறவில்லை நீ கொடுத்த ரணங்கள்
இளமையில் மிளிர்ந்த மொட்டு நீ- ஆனால்
சடுதியில் கருகியது மறக்குமோ
உன் வாழ்வு உலகிற்கு நிதர்சனமாய் அமைய எண்ணி
உன் பெயரை நிதர்சனா என சொன்னோம்
காலனும் உன்னில் கொண்ட பாசம்-எம்மையும்
விஞ்சி விட்டதடி யாது செய்வோம்

17.05.2011 அன்று எமது செல்வத்தின் மறைவு கேட்டு ஓடி வந்து உதவியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சகல உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 13.11.2011 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் கலந்துகொண்டு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓடக்கரை சனசமூகநிலையம்,
கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

தந்தை-ப. முருகானந்தராசா, தாய் -பவானி,
அண்ணன்- நிரோஜன், தம்பி -சதுர்ஷன்

(6787)

# மக்களுக்காக செயற்படும் போது கட்சிபேதம் இருக்கக்கூடாது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்தியில் ஜனாதிபதி, அமைச்சர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப் பினர்கள் போன்றவர்களுக்கு மக்களுக்காக செய்ய வேண்டிய பாரிய பணி ஒன்று இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதனை தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்காக செயற்படும் போது கட்சி பேதம் உள்ளிட்ட அனைத்து போதனையும் ஒதுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதேவேளை மக்களின் தேவையை நிறைவு செய்வதில் கிராமிய தலைவர்களுக்கு பாரிய கடமை இருப் பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்பு


நுவரெலியா மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக மாவட்ட செயலாளர் டி.பி. ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எல்லை மீர்நிர்ணய நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்துக்குப் பின்னர் நுவரெலியா மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களை அதிகரிப்பது தொடர்பில் பேசப்பட்டாலும் அது அமுலாக்கப்படவில்லை.

8 இலட்சம் மக்களின் தேவை, நிலப்பரப்பு என்பவற்றை கருதி ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் அடிப்படையில் அரச நிர்வாக அமைச்சினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டு மீள் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நுவரெலியா மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது குறித்து யாவரும் கருத்து தெரிவிக்கலாம். இது மொழி, இன அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



# அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

## நடத்தும் 29 ஆவது ஆண்டு

# மகர ஜோதிப் பெருவிழா

**இடம்:- ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் தம்பையா சத்திரம்-கொழும்பு-13.**

**காலம்:- கார்த்திகை முதலாம் திகதி (17.11.2011) தொடக்கம் 48 நாட்கள்**



இலங்கையின் முதலாவது இந்து மத குருபீடாதிபதி
சிவாகமஞானி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்
சங்கானை இலுப்பைத் தாழ் முருகமூர்த்தி ஆதீன குரு முதல்வர்
சிவாகமஞானி சிவ.நித்தியானந்த சிவாச்சார்யார்
ஆகியோரின் அருள் ஆசியுடன் சர்வதேச இந்து மத குருபீடாதிபதி—சபரிமலைக் குருஜி
ஆன்மீக அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்
தலைமையில் மகரஜோதிப் பெருவிழா நடைபெறும்.

பிரம்மஸ்ரீ சுதாஸ்ரீ சுபஸ்வரசர்மா
(ஸ்ரீசாஸ்தாபீடம்—கொழும்பு)

சுபஸ்ரீ சாம்பசிவஸ்ரீ மணிகண்ட சர்மா
(ஸ்ரீ சாஸ்தாபீட இளவரசன்)

தொ.பே:
011 2433468 S.N மோகன் நாயுடு (J.P)
0779930140 (நிர்வாகப் பணிப்பாளர்)

பிரம்மஸ்ரீ நித்ய சுதானந்தசர்மா
(ஸ்ரீசாஸ்தாபீட நிர்வாகப் பொறுப்பாளர் –I.D.M(சங்கானை)

# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 32

## வழிபாடு

கடவுளை வழிபடுவதால் உலகிற்கு நன்மை வருமா? நம் நாட்டில் இருக்கு மளவிற்கு உலகில் வேறெங்கும் கடவுளர் கள் இல்லை. ஆயிரக்கனக்கான கடவுள் களை நாம் வழிபடுகிறோம். ஒவ்வொரு தெருவிலும் குறைந்த பட்சம் 4கோயில் களாவது உள்ளன. அப்படியிருந்தாலும் நம் நாட்டில் பாதி யளவு மக்களுக்கு உண்ண உண வில்லை. அப் படியென்றால் கடவுள்களாலோ, வழிபாடுகளாலோ எந்தப் பயனும் இல்லையா? அப்படியில்லை.

நாம் சரியாகப் புரிந்து கொள்ளாவிடில் எதுவுமே நமக்கு சாதகமாக செயற்படாது. நாம் செய்யும் செயல் மூலம் நன்மை நிகழ வேண்டுமென்றால் அதனைச் சரியான முறையில் செய்தால் மட்டுமே நன்மை நிகழ முடியும். வழிபாட்டு முறையை எடுத்துக் கொண்டீர்களானால் ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு ஜாதியிலும், ஒவ்வொரு மதத்திலும், ஒவ்வொரு குடும்பத்திலும் வெவ் வேறுவிதமானவழிபாட்டு முறைகள் உள்ளன.

வழிபாட்டு முறையை உருவாக்கியது எனென்றால், இதயத்தில் பக்தி என்ற உணர்வை வதற்காகத்தான். வழிபாடு என்பது நமக் குள் பக்தியை உருவாக்குவதற்கான கருவி. நாம் இந்தக் கருவியில் சிக்கிப்போய் நோக் கத்தை விட்டதால், வழிபாடு என்பது நன்மை யைத் தரக்கூடியதாக அமையவில்லை. எனவே தான் வழிபாடு குறித்த கேள்வி எழுந்துள்ளது. இதயத்தில் பக்தியிருந்தால், நமது தன்மை எப்போதுமே அமைதியான, ஆனந்தமான நிலைக்கு இயல்பாகவே வந்துவிடும். நம் செயற்படும்முறை முற்றி லும் மாறுபட்ட தன்மையில் இருக்கும். தமக்குள் இயல்பாகவே அமைதியாய் இருக்கும் மனித சமூகம், நிச்சயமாக நல மாய் வாழும் மனித சமூகமாகவே இருக் கும். இந்த நிலையை உருவாக்குவதற் கீகத்தான் வழிபாடு என்ற முறை வந்தது.

வழிபாட்டினை மேற்கொள்வதால் கடவுள் உங்களுக்கு ஏதேனும் செய்வார் என்ற நோக்கில் வழிபாடு உருவாக்கப்படவில்லை. உங்களுக்குள் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கவே வழிபாடு என்ற கருவியை பயன்படுத்தினோம். உலகில் எந்தச் செய லைச் செய்வதாக இருந்தாலும். அதற்குப் புத்திசாலித்தனம் மட்டும்போது மானதல்ல, பக் தியும் தேவை. இந்தப் பிரபஞ் சம் முழுவதையும் கடவுள்தான் உருவாக் கினார் என்று போதித்து இருந்தார்கள். யாரும், அதனை அப்படிப் பார்க்கவில்லை யென்பதால் பக்தியை வளர்த்துக் கொள்ளு மாறு வலியுறுத்தினார்கள். இங்கிருக்கும் இந்த மரம் கடவுள் உருவாக்கியது என்று நீங்கள் உணர்ந்தால், உங்களால் அதை வெட்ட முடியுமா? முடியா தல்லவா? அதீத தேவையிருந்தால் மட்டுமே அதை நாம் வெட்டுவோம். உங்கள் அருகேயிருக்கும் மனிதரைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்க வில்லை. ஆனால், அந்த மனிதரை உரு வாக்கியதும் கடவுள்தான் என்பதை உணர்ந் தால், அவர் மீது வெறுப்பு வருமா?

ஒரு சாதாரண மனிதரிடம், அவன் அறியா மலேயே எல்லாவிதமான தன்மைகளும் உருவாக பக்தியென்பது நல்ல கருவி. பக் தியை உருவாக்கிட தற்போது ஏதேனும் செயல் தேவைப்படுகிறது. அமர்ந்தவாறே பக்திநிலையை எய்த அனைவராலும் இயல வில்லை. எனவே அதற்கென ஒரு செயலை உருவாக்கினோம், அது தான் வழிபாடு.

இந்த வழிபாடு காலப்போக்கில் பல வடி வங்களை எடுத்துவிட்டது. இந்த வடிவங் களால் ப்க்தியென்பது மறந்து விட்டது. வழி பாடு, நம் உள்தன்மையை மாற்றிக்கொள்ள உருவாக்கப்பட்ட கருவியென்பதை மறந்த தால் வழிபாடு தேவையா? இல்லையா? என்ற கேள்வி மனிதன் மனதில் வந்து விட்டது. இப்படித்தான் வழிபட வேண்டும், அப்படித் தான் வழிபடவேண்டும் என்றில்லை. வழிபாடு, கோவிலில் தான் செயற்படவேண்டும் என்ற அவசியமில்லை. கோவிலில் வழிபடத்தான் உங்களுக்கு விருப்பம் என்றால் அங்கே செல்லலாம். அல்லது பணியாற்றுமிடத்தில் பக்தியோடு செயற்படுவதில்தான் உங்க ளுக்கு விருப்பம் என்றால், அங்கே அப்படி யிருக்கலாம். அல்லது மரத்தடியில் அமர்ந்து பக்தியோடு இருக்க முடியுமென்றால் அப்படிச் செய்யலாம். குறிப்பிட்ட செயலைச்செய்தால் தான் பக்தியோடு இருக்கமுடியும் என்றி ல்லை. நமக்கேற்ற செயல்களை பக்தியோடு நம் மால் செய்யமுடியும்.

சில காலங்களுக்கு முன்பாக என்னிடம் ஒருவர் இவ்வாறு கூறினார், "25 வருடங்க ளுகளாக ஏராளமான வழிபாடுகளை நான் செய்து வருகிறேன். ஆனால், எனக்குள் பக்தி யென்பதே வரவில்லை. ஆனால் எனக்குத் தெரிந்த மனிதர் ஒருவர் இருக்கிறார். கடவுள் முன்பு அமர்ந்தாலே அவர் கண்களில் கண் ணீர் வருகிறது. எப்பொழுதும் அவர் ஆனந் தமாக இருக்கிறார். எனக்கு அப்படி நடக்க வில்லை" என்று கூறுனார். நான் அவரிடம், "உங்களுக்கு மிகவும் பிடித்தமானவர் யார்?" என்று கேட்டேன். அவர் எனக்கு "என் மனைவி என்றால் மிகவும் பிரியம். ஆனால் அவர் இறந்து 10 வருடங்களாகிவிட்டன" என்றார். நான் அவரிடம் கூறினேன், "அப்ப டியானால் நீங்கள் உங்கள் மனைவியின் புகைப்படத்தை வைத்து வழிபடுங்கள், உங்க ளுக்கு வழிபாடு வந்துவிடும்" என்று. ஒரு வாரம் கழித்து வந்தவர் "இப்போது என் கண் ணிலும் கண்ணீர் வருகின்றது, ஆனந்தமாக இருக்கிறது" என்றார்.

ஏதோ ஒரு உருவத்தோடு தொடர்பு வைத் துக் கொள்ளும் நிலையில் உங்களுக்கு அன்பு ஊற்றெடுத்தால் அதுதான் பக்தி. பக்தியை உருவாக்கவே வழிபாடு. அதனை மூடநம்பிக் கையாக வளர்த்துக் கொள்ளாமல் சரியான முறையில் உபயோகிக்க வேண்டும். இதனை ஒரு விஞ்ஞானம் என்றும் சொல்லலாம். உள்சூழ்நிலையை நல்லவிதத்தில் உரு வாக்க இருக்கும் விஞ்ஞானமே,யோக விஞ் ஞானம். இந்த யோக விஞ்ஞானத்தில் ஒரு குறிப்பிட்ட தன்மை இருக்கிறது. இதை "ஈஸ்வர ப்ராணிக் தியானம்" என்று கூறு வோம். அதாவது, அனைத்தீற்கும் கடவுள் தான் காரணம் என்பது இதன் பொருள். மனிதன் இந்த நிலையை அடையும் போது அவனது புரிதலுக்கும் அப்பாலுள்ள சக்தி யின் மீது பக்தியும் அன்பும் அவனுள் பொங் கிட வாய்ப்புள்ளது.

அருகிலிருப்பவர்கள் யாரைப் பார்த் தாலும் அன்பு வரவில்லை, ஆனால், அனைத் தையும் உருவாக்கியவன் மீது அன்பு வரு கிறது. இதைப்படைத்தவன் மீது அன்பு வருகிறபோது, அவன் உருவாக்கிய படைப் புகளின் மீதும் அன்புதானே வரவேண்டும். நமக்கு யாரோ ஒருவரை மிகவும் பிடிக்கு மென்றால், அவர் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களும் நமக்குப் பிடிக்கும் தானே! எனவே பிரபஞ்சத்தை உருவாக்கிய கடவு ளின் மீது வழிபாட்டின் காரணமாக அன்பு பெருகுமாயின், அதே வழிபாட்டை சரியான விதத்தில் பயன்படுத்தினால் அவர் உரு வாக்கிய படைப்புகளின் மீதும் அன்பு பெரு கும். இப்படி இருந்தால்தான் ஒரு மனிதன் முழுமையான வாழ்க்கையை வாழமுடியும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# ஒடுக்கப்பட்ட மக்களின் சின்னஞ்சிறு கடவுளர் வழிபாடு

## பெருந்தோட்ட மக்களின் மத வழிபாடு தொடர்பான சமூகவியல் ஆய்வு

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

ரா.நித்தியானந்தன் B.A.(Hons),M.Phil

நாட்டாரியல் 05

கூத்து முடிந்தபின் காமதகன நிகழ்ச்சி நடைபெறுகின்றது. பின்னர் தேவர் கள், மக்கள் என்போர் அசுரர்களின் கொடுங்கோன்மையால், துயருறு கின்றனர் என்பதை காமனிடம் தேவர் களும் மக் களும் முறைப் பாடு செய்கின் றனர். அதற் குத் தீர்வுகாண மன்மதன் புறப்படு கின்றான். அங்கு காமன் சிவனின் நிஷ்டையைக் கலைக்க முற்பட்டுப் போர் தொடுக்கிறான். இறுதியில் சிவனின் நெற்றிக் கண்ணால், எரி யுண்டு இறந்து போகின்றான். இடை யில் போருக்குப் புறப்படுகின்ற காமனை ரதி தடுக்கின்றாள். ரதிக்கும் காமனுக்கும் வாக்குவாதம் ஏற்படு கின்றது. காமன் எரிந்தபின் அங்கே நாடகப் பாத்தி ரங்கள் இரண்டாகப் பிரிகின்றன. அவை காமன் எரிந்த காட்சி, காமன் எரியாத காட்சி என் பனவாகும். காமன் எரிந்த காட்சி ஈமக் கிரியை செய்ய, காமன் எரியாத காட்சி காமனுக்கு உயிர் கொடுக்கும் விழா வாக காட்டப்படுகின்றது. அச்சமயம் ரதி சிவனிடம் சென்று காமனுக்கு உயிர்ப்பிச்சை கேட்டு மன்றாட சிவன் தனது தாண்டவ நிலையிலிருந்து இறங்கி மன்மதனுக்கு உயிர் கொடுக் கின்றார்.

**பெருந்தொட்டக்காமன் கூத்தின் சமூகவியல் பின்னணி**

இக்கதை ஒரு புராணக்கதையாக இருந்த போதும் பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை இதில் ஒரு சமூக உள்நோக்கம் காணப் படுகின்றது. பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளுக்கு உரிய புனைவியலாக இங்கு மன்மதன் காட்டப் படுகின்றான். அவனே அவர் களின் பிரச் சினைகளுக் கான தீர்வின் குறியீடாகும். எனவே தென்னிந்திய நகர, கிராமிய வடிங்களில் இருந்து பெருந்தோட்டங்களில் காம னின் போற்றலியல் மாறுபடுகின்றது. இதனை இம்மக்கள் போற்றுவதற் குரிய கருதுகோள் அல்லது அதன் குறியீட்டு நோக்கம் சுவையானது. ஏற் கனவே கூறியது போல தனிமைப்பட்ட முறைமை ஒன்றில் வாழ்கின்றவர்கள் இத்தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். அங்கு தோட்டத்துரைமார், கங்காணி மார், கணக்குப்பிள்ளை போன்றோரின் சொல்லொணா அடக்குமுறை என்ப வற்றால், அவர்களின் மனங்களில் பிர வகிக்கின்ற எதிர்ப்புணர்ச்சியைக் காட்ட முடியாத சூழ்நிலையில் அதனை ஏதோ ஒரு வழியில் வெளிக்காட்ட வேண்டும் என்று எண்ணிய தோட்டத் தொழிலாளர்கள் அடக்குமுறையிலான காலனித்துவ காலத்தில் எண்ணியி ருக்க வேண்டும். அதற்கு ஒரு குறி யீடாக இந்தக் காமன் கூத்து அமைந் துள்ளது. இம்மாதிரியான நிகழ்வுகள் தமிழ் நாட்டு இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டின் நந்தனார் சரிதம் இவ்வாறான தொரு வெளிப்பாடே.

நிஷ்டை கலையாத சிவனின் அமைதி யைக் குலைக்க வேண்டும் அசுரர்கள் போலத் துன்பம் இழைக்கும் கங் காணி, கணக்குப்பிள்ளை ஏனைய அதிகரிகளின் கொடுமைகளைத் தோட் டத்துரை செவிமடுக்கச் செய்ய வேண் டும் அல்லது தோட்டத்துரை மீது தமது வெறுப்பை, எதிர்ப்புணர்வை காட்ட வேண்டும், இதற்கு ஒரு குறியீடாகவே இந்தக் காமன் கூத்து அமைந்தது. எனவே தொழிலாளர் பிரச்சனைகளின் தீர்வின் குறியீடாக காமன் காணப்படு கின்றான். தோட்ட லயங்கள் தோறும் தான், ஒரு போராளி என்பதை நினை வுறுத்தவும், தொழிலாளர்களை ஒன்று படுத்தவுமாக ஒரு மௌனக் குறியீ டாகவும் வில்லுடன் கூடிய காமனின் நடனம் இங்கு இடம்பெறுகிறது. காமனும் ரதியும் முகத்திற்கு நிறமிட்டு, வர்ணம்பூசி, அழகும் சோடனையும் செய்வதுடன் அவர்கள் அச்சமூகத் தின் குறியீடாகின்றனர். இரவில் கைகளில் பந்தங்களுடனும் பெற் றோல் மாக்ஸ் ஒளியோடும், மேள, தாளங்களோடும் சேர்ந்து லயம் லய மாக அவர்கள் செல்கின்றபோது அது ஒரு போராளிகள் கூட்டம்போன்ற பிரதிமையை அவர்களிடம் ஏற்ப டுத்துகின்றது. அந்தக் கூத்தைப் பார்க்க வரும் தோட்டத்துரை மற்றும் நிர் வாகிகளுக்குக்கூட தனி இடம் அங்கு ஒதுக்கப்படுவதில்லை. அவர்களும் தோட்ட மக்களுடன் அமர்ந்து காமன் விழாவைப் பார்ப்பர். காமன் எரியுண்டபின் பாடப்படும் ஒப்பாரிப் பாடல்களில் மறைமுகமாக கங்காணி மாருக்கு எதிரான வசைப்பாடலடிகள் நாட்டுப்புறப் பாடலடிகளாக தோட் டப்புற காமன் பாடல்களில் காணப் படுகின்றன.

(தொடரும்)

# மிகச் சிறந்த வங்கித்தாள் தொடர் இறுதிச் சுற்றுக்கு தெரிவானவர் விருதினை வென்ற இல.மத்திய வங்கி

இலங்கை மத்திய வங்கி கடந்த மாதம் முதல் வாரம் சிங்கப்பூரில் நடத்தப்பட்ட நாணய அலுவல்களின் சர்வதேச அமைப்பின் மாநாட்டில் மிகச்சிறந்த வங்கித்தாள் தொடர் விருதுக்காக தெரிவான 17 நாடுகள் இடையே இறுதிச் சுற்றுக்குத் தெரிவான நாடு என்ற கௌரவத்தைப் பெற்றிருக்கிறது.

அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கை நடனக் கலைஞர்கள் என்ற புதிய நாணயத்தாள் தொடர் 2011 பெப்ரவரியில் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டது.

உகண்டா வங்கி இவ்விருதினை வென்ற வேளையில், இலங்கை மத்திய வங்கியும் பிலிப்பைன்ஸ் மத்திய வங்கியும் 2011ஆம் ஆண்டுக்கான மிகச்சிறந்த புதிய வங்கித்தாள் தொடர் இறுதிக்குத் தெரிவானவர்களுக்கான விருதினை பெற்றன.

இந்த விருதினை, புதிய நாணயத்தாள் தொடரை அச்சிட்ட டி லா றூ நிறுவனம் இலங்கை மத்திய வங்கி சார்பில் பெற்றுக்கொண்டது.

நாணய அலுவல்களின் பன்னாட்டு அமைப்பு, மத்திய வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், வழங்குநர்கள் மற்றும் நாணயத் தொழில்துறையிலுள்ள மற்றைய ஆர்வலர்கள் ஆகியோருக்கு அவர்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கான பன்னாட்டு அரங்கம் ஒன்றினை வழங்குகின்ற அமைப்பாகும்.

நாணய அலுவல்கள் பன்னாட்டு அமைப்பின் விருது நாணய அலுவல்கள் பன்னாட்டு அமைப்பின் நாணய மாநாட்டில் ஒவ்வொரு 18 மாதங்களுக்கு ஒருதடவை வழங்கப்படுவதுடன் விருதானது நாணயக் கைத்தொழிலுக்கான அங்கீகாரமாகவும் அதன் நேர்த்தியை மேம்படுத்துவதாகவும் உள்ளது.

இவ்விருதானது பின்வருவனவற்றுக்காக வழங்கப்படுகின்றது.

1.மிகச்சிறந்த புதிய வங்கித்தாள் அல்லது வங்கித்தாள் தொடர்.

2.மிகச்சிறந்த நாணயக்குத்தி அல்லது குத்தித் தொடர்.

3.மிகச்சிறந்தநாணயதோற்றப்பாடு.

4.மிகச்சிறந்த நாணயப் புதுமைகள், செயல்முறை, தயாரிப்பு.


5.மிகச்சிறந்த பொதுமக்கள் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்.

6.மிகச்சிறந்தநாணயவெப்தளம்.

7.மிகச்சிறந்த சாதனை அல்லது வாழ்நாள் சாதனை விருது.




அம்பாந்தோட்டைக்கு...



2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் உரிமையினை பெறுவதற்கான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் கரீபியன் தீவில் இடம்பெற்றது. இதில் இலங்கைக்கு ஆதரவு திரட்டச் சென்ற குழுவில் இடம்பெற்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட குழுவினர் ஆதரவு திரட்டும் நிகழ்ச்சியொன்றில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

ஆனால் இவ்வாக்கெடுப்பில் அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரம் வெற்றிபெற்றுள்ளது. இலங்கைக்கு ஆதரவாக 27 உறுப்பினர் மாத்திரமே வாக்களித்தனர். ஆஸிக்கு 43 உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர்.

# கிளிநொச்சியில் குத்தகை அடிப்படையில் வாகனங்கள் வழங்கும் நடவடிக்கை

யுத்தம் காரணமாக கடந்த பல வருடங்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருந்த வங்கி நடவடிக்கைகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிணங்க பல வங்கிக் கிளைகள் கிநொச்சி மாவட்டத்தில் பல பிரதேசங்களில் திறக்கப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் முதல் தடவையாக கிளிநொச்சி மாவட்டத்தில் குத்தகை அடிப்படையில் வாகனங்களை வழங்கும் நடவடிக்கையினை இலங்கை வங்கி ஆரம்பித்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு வாகனங்களை குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படுகின்றன

இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்பவர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களைவிட தற்போது பெருமளவு குறைவடைந்துள்ள போதிலும் இலங்கைப் பொருளாதாரத் தில் அந்நியச் செலாவணியின் பங்களிப்பு கடந்த காலங்களை விட அதிகரித்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நோக்கில் வெளிநாட்டுக்கு தொழில் தேடி செல்பவர்களின் எண்ணிக்கை 2008-ம் ஆண்டு இரண்டு லட்சத்து 50 ஆயிரத்து 499 ஆக இருந்த நிலையில் 2010ஆம் அக்டோபர் மாதம் இரண்டு இலட்சத்து 18 ஆயிரத்து 342 ஆக குறைவடைந்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்லும் பெற்றோரின் பிள்ளைகளுக்கு உதவித் தொகையை வழங்குவதை அறிமுகப்படுத்தியுள்ள பணியகம், அதற்கென வருடாந்தம் அதிகளவான நிதியை செலவிட்டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டில் தொழில் புரிவதற்காக சென்று அங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டுத் தொகையையும் பணியகம் வழங்கியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் அண்மையில் இலங்கை-இத்தாலி இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய 2012-ம் ஆண்டு முதல் இத்தாலிக்கு வேலைவாய்ப்பை பெற்றுச் செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மிகைக் கேள்வியில் முடிந்த பீபிள்ஸ் லீசிங் ஐ.பி.ஓ

கடந்த 3-ம் திகதிய பீப்பிள் லீசிங் கம்பனியின் ரூ.7 பில்லியன் பெறுமதியான ஆரம்ப பங்கு வழங்கல் அன்றைய தினமே ரூ.2.5 பில்லியன் மிகைக் கேள்வியுடன் நிறைவடைந்தது. அண்ணளவாக ரூ.9.5 பில்லியன் பெறுமதியான விண்ணப்பங்கள் கிடைத்தன.

ரூ.18 படி 390 மில்லியன் சாதாரண வாக்குரிமை பங்குளை பீப்பிள் லீசிங் கம்பனி வழங்கியது.

இதேவேளை, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த மலிக் க்ாடர் கடந்த வாரம் தனது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார். இந்நடவடிக்கையும் பங்குச் சந்தையில் கடந்த வாரம் ஏற்பட்ட அதிகரிப்பு போக்குக்கு காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.42 | 111.05 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 173.57 | 177.57 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 147.94 | 151.97 |
| சுவிஸ் பிராங் | 119.65 | 123.53 |
| கனேடிய டொலர் | 106.56 | 109.76 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.98 | 113.60 |
| சிங்கப்பூர் டொலர் | 84.24 | 86.65 |
| ஜப்பான் யென் | 1.40 | 1.44 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.20 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.00 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




ஜனசக்தி இன்சுரன்ஸ் பி.எல்.சி நிறுவனத்தால் அனுசரணை வழங்கப்படுவதும் இலங்கை ஸ்குவாஷ் சம்மேளத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படுவதுமான ஜனசக்தி திறந்த ஸ்குவாஷ் சம்பியன்ஷிப் போட்டியின் ஒன்பதாவது ஆண்டுப் போட்டி நவம்பர் 11ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றுவருகிறது. இப்போட்டிகள் தமிழ் யூனியன் கிரிக்கெட் மற்றும் மெய்வல்லுநர் கழக கட்டிடத் தொகுதியில் இடம்பெறும்.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6406.52 | 6332.47 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5698.85 | 5651.87 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 1,720.02

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* லங்கா அசோக் (3700.00), கூஜே(174.80), மிரமர்(285.00), ஹோட்டல் சிகிரியா(70.40), சிலோன் ரொபாக்கோ (431.50).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* ஹோட்டல் டெவலப்பர்ஸ் (94.80), எஸ்எம்பி லீசிங்(0.90), மேர்ஷன்ட் சிப்பிங்(266.60), இன்பிராசக்ஷர்(156.40), உடபுசல்லாவ(36.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# கிரீஸ் கடனாளியானது ஏன்?

ஐரோப்பிய நாடுகளுக்கு பொதுவான பணமான யூரோ அறிவிக்கப்பட்டபோது அந்நாடுகளின் பொருளாதார நிலை வெவ்வேறாக இருந்தது. அதைக் கருத்தில் கொள்ளாமல் ஐரோப்பாவின் 27 நாடுகளில், 17 நாடுகளுக்கு பொதுவான பணமாக யூரோ அங்கீகரிக்கப்பட்டுவிட்டதால் தற்போது கிரீஸ் நாடு சிக்கலில் தவிக்கிறது.

கிரீஸ் நாட்டில் 2001-ம் ஆண்டு யூரோ அறிமுகப்படுத்தப்பட்டது. 2002 பெப்ரவரி வரை அதன் பழைய பணமாக டிராச்மா பாவனையில் இருந்தது. என்னும் கூட டிராச்மா விலிருந்து முற்றிலுமாக கிரீஸ் மாறி விடவில்லை.

பழைய பணத்திலிருந்து மாற 2012 மார்ச் வரை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதற்குள் கிரீஸ் திவாலாகும் சூழல் உருவாகிவிட் டது.

இதன் பாதிப்பு மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தநிலை தொடர்ந்தால் யூரோ மண்டலத்திலிருந்து கிரீஸை நீக்கும் நிலை உருவாகும்.

அத்தகைய நிலை ஏற்பட்டால், அந் நாடு இன்னும் கடனாளியாகி விடும். வங்கிகள் அனைத்தும் திவாலாகிவிடும்.

அந் நாட்டுப் பணத்தை யூரோவிலிருந்து வேறு வகையில் மாற்ற வேண்டிய நிலை ஏற்படும் .அதற்குரிய மதிப்பீட்டை நிர்ணயிப்பது தற்போதைய நிலையில் சாத்தியம் அல்ல.

கிரீஸில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி ஐரோப்பிய நிதி நெருக்கடிக்கு முக்கிய காரணமாக விளங்குகின்றது.

இந்நிலையில் ஐரோப்பிய யூனியன் அந்த நாட்டுக்கு ரூபா.14 இலட்சம் கோடி நிதியுதவி அளிக்க முன் வந்துள்ள போதிலும் அதை ஏற்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்படும் என கிரீஸ் அறிவித்தது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

அயர்லாந்து, ஸ்பெயின், போர்த்துகல், கிரீஸ் நாடுகளைத் தொடர்ந்து தற்போது இத்தாலியும் கடும் கடன் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுக்கடன் 120 சத வீதம்வரை உயர்ந்து விட்டது.

## பதவி விலகுகிறார் இத்தாலி பிரதமர்

இத்தாலிப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோணி, புதிய வரவு செலவுத் திட்டத்திற்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் கிடைத்த பிறகு பதவி விலகி விடுவேன் என்று அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய அமைப்புகள் மாற்றம் செய்யக் கோரும் நிதிச்சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட பிறகு பதவி விலகுவேன் என்றும் இத்தாலி அதன் நிதி விவகாரங்களை சீர்திருத்த விரும்புகின்றது என்பதை அனைத்துலக நிதிச் சந்தைகளுக்கு காட்டுவதே தற்போது முக்கியமான வேலை என்றும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள மூன்றாவது பெரிய பொருளியல் நாடான இத்தாலி மீது தற்போது அனைத்துலக கவனம் திரும்பியுள்ளது.

கிரீஸ் சிக்கியிருக்கும் நிதி நெருக்கடி மற்ற நாடுகளுக்கும் பரவும் என்ற அச்சமே அதற்குக் காரணம்.

இத்தாலிக்கு கடன்களை அடைக்கும் திறன் இருந்தாலும் பெருமளவு கடனை அது குவித்து வைத்துள்ளது. அதனால் தாக்குப் பிடிக்க முடியாத சூழ்நிலைக்கு இத்தாலி தள்ளப்படலாம் என்ற அச்சம் முதலீட்டாளர்களிடையே நிலவுகிறது.

# புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களுக்கு அமைவாகவே சனல் 4 தொழிற்படுகின்றது

## சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சர்வதேச ஊடகங்கள் மூலம் அவ்வப்போது இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் அவசியத்தை சட்டவல்லுநர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சனல் 4 அலைவரிசையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த நாட்டிற்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு காணொளிகளும் வெளியிடப்பட்டதாக கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட பீடாதிபதி கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் அமைப்பின் அழுத்தங்களுக்கு அமைய காணொளிகளை வெளியிடுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்படி எதிர்வரும் ஜனவரி மாதம் மேலுமொரு காணொளியை வெளியிடத் தயாராகி வருவதாக சர்வதேச ஊடகங்கள் ஊடாகத் தெரிய வந்துள்ளது என பிரதீபா மஹாநாம தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நிலைமைகளின் கீழ் வெளிவிவகார அமைச்சு அவதானம் செலுத்தவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சனல்-4 அலைவரிசையினால் வெளியிடத் திட்டமிட்டுள்ள காணொளி தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பொது சன உறவுகள் மற்றும் தொலைத் தொடர்பாடல்கள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சரத் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அந்தமானிலிருந்து இலங்கை மீனவர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

அந்தமான் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 10பேர் நேற்று நாடு திரும்பியுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த மீனவர்களில் 5பேர் கடந்த 7ஆம் திகதி தெய்வேந்திர முனையில் இருந்து கடலுக்குச் சென்ற வேளையில் அந்தமான் தீவில் அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களை நாட்டிற்கு வரவழைக்கும் பொருட்டு விமானப் பயணச் சீட்டுக்களுக்காக கடற்றொழில் அமைச்சு 3 இலட்சத்து 60ஆயிரம் ரூபாவை செலவிட்டுள்ளது.

இதுதவிர, இயந்திரக் கோளாறு காரணமாக நிர்க்கதியான மற்றுமொரு மீனவப் படகிலிருந்து 5 இலங்கை மீனவர்களும் நேற்றைய தினம் நாடு திரும்பியுள்ளனர்.

அந்தமான் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் 6 இலங்கை மீனவர்களையும் விரைவில் நாட்டிற்கு அழைத்து வருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிடுகின்றது. (அ-2)

# துறைமுகம் அமைப்பதாக கூறி மக்களை ஏமாற்றுகிறது அரசு

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம் ஆழம் குறைந்த இடம் எனவும் பெரிய சரக்கு கப்பல்களை நிறுத்துவதற்கு போதிய வசதிகள் கிடையாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஜனாதிபதியின் நன்மதிப்பினை உயர்த்தும் நோக்கில் இந்த துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

துறைமுகம் உத்தியோகபூர்வமாக ஒரு ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இன்னமும் சீரான முறையில் இயங்கத் தொடங்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

துறைமுகத்தில் 7 ஆயிரம் சீன தொழிலாளர்கள் பணியாற்றி வருவதனால் பிரதேச மக்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# புலிகளின் தப்பிச் செல்லும் முயற்சி தோல்வி; போர்க்குற்றச்சாட்டுகளுக்கு இதுவே காரணம்

(கொழும்பு)

இறுதிக்கட்ட போரின் போது புலித் தலைவர்கள் தப்பிச் செல்ல முயற்சி செய்ததாகவும் இந்த முயற்சி தோல்வியடைந்த காரணத்தினால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாக ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹனே தெரிவித்துள்ளார்.

அத்துடன் புலிகள் பொதுமக்களை மனித கேடயமாக பயன்படுத்திக் கொண்டனர் என்றும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் 1.5 மில்லியன் நிலக்கண்ணி வெடிகளை புதைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புலி ஆதரவாளர்கள் தொடர்ந்தும் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)




★ 1002-இங்கிலாந்தில் வசிக்கும் அனைத்து டேன் பழங்குடிகளையும் கொல்லும்படி ஆங்கிலேய மன்னன் எத்தல்ரெட் உத்தரவிட்டான். (இது சென் பிறைஸ் நாள் படுகொலைகள் என அழைக்கப்பட்டது)

★ 1851-வோஷிங்டனின் சியாட்டில் நகரில் முதல் ஐரோப்பியக் குடியேற்றக்காரர்களான ஆர்தர் ஏ.டென்னி என்பவரும் அவரது குழுவினரும் வந்திறங்கினர்.

★ 1887-மத்திய லண்டன் பகுதியில் அயர்லாந்து விடுதலைப் போராட்ட ஆதரவாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் வெடித்தது.

★ 1887-நவம்பர் 11 இல் சிக்காகோவில் தூக்கிலிடப்பட்ட நான்கு தொழிலாளர் தலைவர்களின் இறுதி ஊர்வலத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

★ 1918-ஒட்டோமான் பேரரசின் தலைநகர் கொன்ஸ்டண்டீனப் போல் நகரை கூட்டுப் படைகள் கைப்பற்றின.

★ 1950-வெனிசுவேலாவின் ஜனாதிபதி ஜெனரல் கார்லொஸ் டெல்காடோ சால்போட் படுகொலை செய்யப்பட்டார்.

★ 1957-கோர்டன் கூல்ட் என்பவ்ரால் லேசர் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1965-அமெரிக்காவின் யார்மூத் காசில் என்ற பயணிகள் கப்பல் பகாமசில் மூழ்கியதில் 90 பேர் உயிரிழந்தனர்.

★ 1970-போலா சூறாவளி: கிழக்குப் பாகிஸ்தானில் இடம்பெற்ற மிகப் பெரும் சூறாவளியில் 5 இலட்சம் பேர் வரையில் உயிரிழந்தனர். இது 20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் இயற்கை அழிவு எனக் கருதப்படுகிறது.

★ 1971-ஐக்கிய அமெரிக்காவின் மரைனர் 9. விண்கப்பல் செவ்வாய்க்கோளை சுற்றி வந்தது. இதுவே பூமியை விட வேறொரு கோளைச் சுற்றி வந்த முதலாவது விண்கப்பலாகும்.

★ 1985-கொலம்பியாவில் நெவாடோ டெல் ரூஸ் என்ற எரிமலை வெடித்ததில் ஏற்பட்ட மண்சரிவினால் ஆர்மேரோ நகரம் அழிந்தது. 23 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1989-இலங்கையின் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகண விஜேவீர இராணுவத்தினரால் முதல் நாள் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1993-யாழ்ப்பாணம் புனித ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது இலங்கை விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த 9 பொது மக்கள் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

★ 1994-ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய சுவீடன் மக்கள் முடிவு செய்தனர்.

★ 1995-சவுதி அரேபியாவில் ரியாத் நகரில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் ஐந்து அமெரிக்கர்களும் இரண்டு இந்தியர்களும் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 354-ஹிப்போவின் அகஸ்டீன், மெய்யியலாளர், இறையியலாளர் (இ.430)

★ 1934-கமால் கமலேஸ்வரன், மேற்கத்தேய இசைக் கலைஞர்

★ 1969-அயான் கேர்சி அலி, சோமாலியப் பெண்ணியவாதி

★ 1979-ரான் ஆர்டெஸ்ட், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்பு

★ 2002-கணபதி கணேசன், மலேசிய இதழாசிரியர் (பி.1955)




★ 1990-உலக வலைப்பின்னல் ஆரம்பிக்கப்பட்டது.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### வாழ்வும் வளமும்

பெற்றவருடன்
மற்றவர் சொல்லிற்கும்
மதிப்புக் கொடு
முதியோரிடம் கருணைகாட்டு
குறைகள் கூறுவதையும்
தவிர்த்துக்கொள்
இத்தருணத்தில்
நீரை நீக்கி
பாலைப் பருகும்
அன்னத்தின் தன்மை
நன்மைதரும் ஆசிரியர்களிடம்
சாலச் சிறந்த
மாணவனென்று
நற்சான்று பெறு
இந்நெறி முறை
வழி நடந்தால்
காலப்போக்கில்
வாழும்போதே
அருளுள்ளம்
உள்ளவரென்றும்
ஏழாமறிவிற்கும்
ஏற்புடையவரென்றும்
உலகமுன்னை
உள்ளங்கைகளில்
உவகையுடன் ஏந்தும்

க.நாகராசா
நுணாவில்

### நம்பிக்கை

உன் மனதின்
ஆயிரமாயிரம் சோகங்களும்
பிரதிபலிக்கின்றன -உன்
விழிகளில் மௌனத்தில் தேடல்களாய்!
நிகழ்காலத்தை நம்பு
எதிரொலிக்கும்-அவை
இனிய சங்குநாதமாய்

ச.அஜந்தா
பொலிகண்டி

### கூக்குரல்கள்

ஏராளமான உயிர்களையும்
இரவுகளையும்
இழந்திருக்கிறோம்
இந்த தேசத்தில் நாம்
அதிகமான
ஊனங்களையும்
பாவங்களையும்
உண்டாக்கி விட்டிருக்கிறது
இறந்தகாலங்கள்
குடி கொண்ட நினைவுகள்
இருக்கும் தலைமுறைகளையும்
அரித்துக் கொண்டிருக்கிறது
இந்த ஏக்கம் என்பது
இதயம் சுமக்கும்
ஏராளமான
சிலுவைகளுக்கு நிகர்

செ.மோகன்ராஜ்
நெடுந்தீவு -12

### அவரவர் பார்வையில்

**மலர்கள்**
மென்மையான தோலினைக்
கொண்டு -வண்ண
ஆடைகளை தினமும் மாற்றி
ஒருநாள் ஆயுள் கொண்ட
ஓர் உயிர்

**விண்மீன்கள்**
இரவு நேர வானத்தில்
தூரத்தே இருந்து
ஜொலிக்கின்ற ஒரு
மலர்க்கூட்டம்

த.சேமா
கொக்குவில்

**காதல்**
இளமை எனும் புயலில்
வளமை அற்றதாய்
வாழ்வை மாற்றும்- ஒரு
பயங்கர சூறாவளி

**ஆசை**
வாழ்வென்ற கலத்தை
வீழ்வெனச் செய்யும்
மந்தி மனதில் வரும்
அந்தி மயக்கம்

ஜெ.ஜெயேந்திரன்
சந்தை மேற்கு ஒழுங்கை.

### வன்மத்தை மறத்தல்

வன்மங்கள் வற்றி விட்டதாய்...
வாசலெங்கும்
கட்டப்படுகிறது தோரணம்
தூரத்து ஒலிக்கு
மெதுவாய்... செவிசாய்த்து
அத்திக்கில் விழிகளையும்
திருப்புகையில்...
வாழ்வழித்து
தின்ற களை தீர்த்து
கிடக்கிறது வன்மம்
தூக்கம் கலைந்து
தாண்டவம் ஆடுதலுக்கான
ஓய்வா? இதுவென
திகைக்கிறது இதயம்
உனை மறக்கும் முயற்சியில் நாம்
எம்மை நீ... மறப்பாயா?

சு.சு.சிந்துதாசன்

### விழித்தெழு இளைஞனே!

விழித்தெழு இளைஞனே
விரைவில் நீ வான் தொடுவாய்
சுட்டெரிக்கும் சூரியனுக்கு
சவால்விடும் உலகம் இது
சிதைந்து போன வாழ்வினை
சிற்பமாக்கிவிடு
சிதறிய சிந்தனைகளை
சிறையில் வைத்து விடு
சோர்ந்து விடாதே
வாழ்வுதனை இழந்திடுவாய்
உயிரோட்டம் உள்ள உண்மை
வாழ்வை உயரப் பறக்கவிடு
முன்னின்று முயற்சி செல்
உன் பின்னே புகழ் தொடரும்
உன் இலட்சியத்துக்கு உரு கொடு
முயற்சியால் அதற்கு
உயிர்கொடு

சஞ்சய்
திருமலை

### இமயம் தொட...


நீ கற்றுக் கொள்வதற்கு
இந்த உலகம் விரிந்து கிடக்கிறது
தீயதைச் சுட்டிக்காட்டாமல்
நன்மைகளை எடுத்துரை
புத்தகப் பூச்சியாய் வாழாமல்
வாழ்க்கைப் புத்தகத்தையும் படி
அதுவே உன்னை வெற்றிப்படியேற்றும்
கற்றது கை மண் அளவு...

மாவை நா.கஜேந்திரன்

### மீள்குடியேறுமா?

முந்திவந்த கால்களெல்லாம்
பந்தியில் உணவு பரிமாறுகின்றது
தந்திவந்து சொன்னாலும்
குந்தியவர் பந்திவிட்டு எழும்பார்
சொர்க்கமாய் இருந்த நிலம்
சொர்க்கிப் போகலாமா?
சோதனை வேதனை வந்தாலும்
சொந்தநில மக்கள் நாம்
சோர்வடைந்து போவதில்லை
அள்ளிவைத்து
அறியாதவராய் கொள்ளிவைத்து
ஆற அமர தேநீர் குடிக்கும்
அடையாள வேந்தர்களே!
ஆடி அடங்கும் நிலத்தைப் பாருங்கள்
சாதனைகள் சமூகத்தில் ஆங்காங்கே
சரித்திரத்தில் இடம்பிடிப்பவை சில
சரிந்துபோன தென்னைகளாய்
கடைசியில் சரிந்து போனதுதான்
தமிழனின் முழுமை

ஜெயம் ஜெகன்
புதுக்குடியிருப்பு



## மௌனத்தின் தேடல் - 96

### எழுந்திடு

காயம் கண்ட மனிதா நீ
பயந்து விடாதே
தமிழன் வீரம் என்ன?
என்பதைக்கூற நீ
மறந்து விடாதே

பா.தனுசன்
சுன்னாகம்.

### யாரிடம் கேட்பது நீதி

எம் உயிர் விற்று
விருந்துண்ணும் வீணர்களே
எழுந்து வருவோம் ஒருநாள்
வீரத் தமிழனாய்!

ச.தீபன்
மயிலங்காடு

### சிறகொடிந்த பறவையாய்

சுதந்திர வெண்புறாவைப்போல
பறந்து திரிந்த என்னை
இன்று சிறகொடிந்த
பறவையாய் ஆக்கிவிட்டதே
இந்த அநியாயப்போர்

ஜெ.டெனீஸ்
குளமங்கால்

### காத்திருக்கும் விழிகள்

சிறுவர் உரிமை
சிறுவர் துஷ்பிரயோகம் என்று
வாய் பிதற்றும் பித்தர்களே
நான் சிந்திய
இரத்தத்திற்கும் கண்ணீருக்கும்
உங்கள் பதில் என்ன?

நெய்தல்
தேன்மொழி

### விழிகளின் கூர்மையில்

பற்றிப் படரும் சோகமதை
பட்டியலிடுவதா சோதரனே!
தொட்டுச் சபதமெடு...
தொடர்வினைத் துயரகற்றி
வெற்றிச்சிகரத்தின்
விழிம்பைத்தொடும்- உன்
விழிகளின் கூர்மை

வீ.வினிஸ்
சாந்தை கல்வி வ.கழகம்

### அம்மாவுக்காக

பசுவைத்தேடும் கன்று போல
அம்மாவைத் தேடும் மகனே-உன்
கண்ணீரைத் துடைக்க
காயங்களை மாற்ற அம்மா ஒருத்தி
அன்போடு அரவணைக்க
வரமாட்டாளா...?

திருமதி அ.யோகேஸ்வரி
கொம்மாந்தறை

### விடியலுக்காக

கடந்த கால நினைவுகள்
காயப்பட்ட மனங்களிலிருந்து
கனவுகளாய் மறைந்து போக
இனி இவன் விழிகள்
புதியதோர் விடியலுக்காக
விரியட்டும்

நா.கீர்த்தனன்
8ஆம் வட்டாரம், நயினாதீவு

### எதிலியாய்...

உறவுகளை இழந்த உனக்கு
உதவக் கரம் நீட்டும் உறவுகள்
சில உண்டு- ஆனால்
உன் கரம் கண்டு- இங்கு
வாடும் மனங்களோ
பல உண்டு

வி.கே. அமுதஸ்ரீ
இமையாணன்.

### உயர்வதற்கு எழுந்து நில்...!

துன்பத்தைக் கண்டு துவளாதே!
துன்பம் உனக்குச் சொந்தமானதல்ல...
பள்ளம் வந்தால் நிச்சயம் மேடு வரும்
உள்ளத்தில் புதுத்தெம்போடு
உயர்வதற்கு எழுந்து நில்

வ.ச.செல்வராசா,திருநாவலூர்.

### பீனிக்ஸ்

தம்பி- உன்னைத் தூக்கிவிட
யாரும் துணைக்கு வரார்-இது
மனிதர்கள் செத்துப்போன மரணபூமி
நீயே எழுந்து கொள்-புது
பீனிக்ஸ் பறவையாய் பறந்துகொள்

சி.மதுஸ்ரீகன்
யாழ்ப்பாணம்.

### வருவது வரட்டும்

எத்தனை சோதனைகளும்
வேதனைகளையும் இத்தனை
ஆண்டுகளாய் அனுபவிக்கின்றோம்
எம்தேசம் விடிவதற்காய்

அ.அன்பு
வரணி

### சோகம்

சோகத்தின் சாயல்
பூமுகத்தில்
கையில் காயம்
எதற்காக?
இன்னும் ஆறாத
யுத்த வடுவா?
இல்லை இப்போ
சீனவெடி பட்டதா?

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### பார்வை

சிறுவனே உன்
ஏக்கம் கலந்த பார்வை
வன்னியில் நடந்த
பல கொடுமைகளை
எமக்கு உரத்துக் கூறுதடா

க.ஜெயரூபன்
பருத்தித்துறை

### விண்ணப்பம்

கண்ணுக்கும் கண்ணீருக்குமோ போட்டி
என் கண்மணிக்கு என்ன கலக்கம்
விண்ணுக்கும் மண்ணுக்குமோ விந்தை
உன் விடியலைத்தேடி என் விண்ணப்பம்

யோ.யாழவன்
யா/நெல்லியடி.ம.ம.வி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 97

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 18.11.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# உலகளவில் பாதிப்பை ஏற்படுத்தும் நோயாக மாறிவரும் நீரிழிவு

தற்போது உலகளாவிய ரீதியில் பாதிப்புக்களையும் இறப்பையும் ஏற்படுத்தி வரும் நோய்களில் நீரிழிவுநோயும் ஒன்று. தொற்ற முடியாத நோய்களில் இருதய நோய்க்கு அடுத்தபடியாக முக்கியமான இடத்தைப் பிடித்திருப்பது நீரிழிவு நோயாகும்.

எமது சமூகத்திலும் பலர் இந் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்கூடு. ஏன் இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் இன்று ஒவ்வொரு வீடுகளிலும் ஒரு நீரிழிவு நோயாளியையாவது காணக்கூடியதாகவுள்ளது. அந்தளவு தூரம் இதன் தாக்கம் உள்ளது.

நாளை திங்கட்கிழமை சர்வதேச நீரிழிவு தினமாகும். இதனை முன்னிட்டு இவ்வாரம் முழுவதும் நீரிழிவு சம்பந்தமான விழிப்பூட்டும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான ஒரு நேரத்தில் நீரிழிவு நோய் பற்றிச் சிந்திப்பது சாலச் சிறந்தது என்றே எண்ணுகின்றேன்.

எம்மில் பலரிடம் நீரிழிவுநோய் என்றால் என்ன? அது ஏன் ஏற்படுகிறது? இதன் வகைகள் என்ன? நீரிழிவுநோய் உள்ளவர்களும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழமுடியுமா? இந்நோயினால் எவ்வாறான பாதிப்புகள் ஏற்படுகின்றன போன்ற பல வினாக்கள் தொக்கி நிற்கின்றன.

நீரிழிவுநோய் என்பது குருதியில் அசாதாரணமாக அதிகளவிலான குளுக்கோஸ் காணப்படுகின்ற ஒரு நோய் நிலைமை ஆகும். (உணவருந்தாது உள்ள வேளையில் குருதி குளுக்கோஸ் அளவு >125mg/dl அல்லது >6.9mm01/l ஆக உள்ள நிலைமை)

நீரிழிவுநோயின்போது இன்சுலின் (Insulin) ஓமோன் அளவில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறைபாடு காணப்படுவதனால் அல்லது இன்சுலின் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்படுவதால் மாப்பொருள், கொழுப்பு மற்றும் புரதச் சமிபாட்டில் அசாதாரண நிலை ஏற்படும்.

இன்சுலின் என்பது சதையச் சுரப்பியால் சுரக்கப்படுகின்ற ஒரு ஓமோன் ஆகும். இது குருதியிலுள்ள குளுக்கோசின் அளவினைத் தொடர்ச்சியாக கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

இன்சுலின் கலங்களுக்குள் குளுக்கோஸ் உட்புகுவதைத் தூண்டுகின்றது. இன்சுலின் அளவில் குறைபாடு காணப்படுகின்றபோது குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிக்கின்றது.

நீரிழிவுநோயில் மூன்று பிரதான வகைகள் காணப்படுகின்றன.

**1.வகை I நீரிழிவு**

- நீரிழிவானது நிர்ப்பீடனத் தொழில்காரணமாக இன்சுலின் சுரக்கும் கலங்கள் பாதிக்கப்படுவதால் அல்லது வைரஸ் நோய்த்தாக்கத்தால் சதையச் சுரப்பியினால் இன்சுலின் சுரக்கப்படுவது முழுமையாக நிறுத்தப்படுவதனால் ஏற்படுகிறது.
- நீரிழிவு பொதுவாக குழந் தைப் பருவத்தில் அல்லது இளம் பராயத்தில் ஆரம்பிக்கின்றது.
- நீரிழிவு உள்ளவர்களுக்கு குருதியில் குளுக்கோஸ் அளவினை கட்டுப்படுத்துவதற்கும் உயிர் வாழ்வதற்கும் தினமும் ஊசிமூலமான இன்சுலின் தேவைப்படுகிறது.

**2.வகை II நீரிழிவு**

- வகை II நீரிழிவு பொதுவாக 35 வ்யதிற்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்படுகின்றது.
- எனினும் அண்மைக்காலங்களில் உலகளாவிய ரீதியில் இவ்வகை நீரிழிவு குறைந்த வயது உள்ளவர்களிலும் ஏற்படுகின்ற தன்மை காணப்படுகின்றது. அத்துடன் தற்போது கட்டிளமைப்பருவத்தினரிடையேயும் நீரிழிவு தோன்றுகின்றதன்மை காணப்படுகின்றது.
- வகை II நீரிழிவில் உணவுக் கட்டுப்பாட்டின்மூலம் மாத்திரம் அல்லது உணவுக் கட்டுப்பாட்டுடன் கூடிய வாய் மூலமான மருந்துச்சிகிச்சை மூலம் குருதி குளுக்கோஸ் காணப்படுகின்றது.
- அநேகமானவர்களில் சதையீ இன்சுலின் சுரக்கும் தன்மையை சிறிதளவு கொண்டிருப்பதால் இன்சுலின் சிகிச்சை தேவைப்படுவதில்லை.
- சிலவேளை இந்நீரிழிவு உள்ளவர்கள் இன்சுலின் பாவிக்கவேண்டி நேரிடலாம்.

உ-ம்:- கர்ப்பகாலம், கடுமையான நோய் ஏற்பட்டவேளை

நீரிழிவு நோய்க்குரிய ஆபத்துக் காரணிகளாக

- அதிக உடல் நிறை
- முறையற்ற உணவுப் பழக்கம்
- சோம்பலான வாழ்க்கைப்பாங்கு
- மன அழுத்தம்
- கர்ப்பகால நீரிழிவு
- குடும்ப அங்கத்தவரின் நீரிழிவு காணப்படல் போன்றவற்றை காரணமாகக் கொள்ள முடியும்

**3. கர்ப்ப கால நீரிழிவு**

கர்ப்ப காலத்தில் கண்டறியப் பட்ட நீரிழிவு நோய் அல்லது கர்ப்ப காலத்தின் போதான பலவீனமான குளுக்கோஸ் தங்கும் தன்மையினால் ஏற்படும் நிலையாகும்.

- இந்த வகை நீரிழிவு பொதுவாக குழந்தைப் பேற்றின் பின்னர் குணமடையும். ஆயினும் இத் தாய்மாரில் எதிர்காலத்தில் இவ்வகை II நீரிழிவு தோன்றுகின்ற அபாயம் அதிகமாகக் காணப்படுகிறது.

## நாளை சர்வதேச நீரிழிவு தினம்

**ஆகவே எதிர்காலத்தில் நீரிழிவு ஏற்படாது தடுக்க**

அதிக உடல் நிறை ஏற்படாது தவிர்த்தல், சுறுசுறுப்பான வாழ்க்கை முறை, ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கம், குறைந்தது 6 மாதங்களுக்கு ஒரு தடவையாவது குருதிக் குளுக்கோஸ் அளவினைப் பரிசோதித்தல், போதியளவு உடற்பயிற்சி போன்றவற்றை நடைமுறைப்படுத்துவது அவசியம்.

**நீரிழிவு நோயுள்ளவர்களும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கு**

சிறந்த குருதிக் குளுக்கோஸ் கட்டுப்பாடு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைப் பாங்கு என்பவற்றின் மூலம் நீரிழிவுநோய் உள்ளவர்கள் சாதாரணமான ஆரோக்கிய வாழ்வு வாழ முடியும்.

- ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கு உணவருந்தாத வேளையில் செய்யப்படுகின்ற குருதிக் குளுக்கோஸ் சோதனை உணவின் பின்னரான (உணவு உட்கொண்டு 2 மணித்தியாலங்களுக்கு பின்னர் ) குருதிக் குளுக்கோஸ் சோதனை HbA1C சோதனை போன்றன போதுமானதில்லை.

நீரிழிவு நோய் உள்ள ஒவ்வொருவரிலும் சிக்கல் நிலைகளை ஆரம்பத்திலேயே கண்டறிய உதவுகின்ற சோதனைகள் மற்றும் ஆய்வு கூடப் பரிசோதனைகளால்

- கண்பரிசோதனை
- அல்புமின் மற்றும் மைக்கிரோ அல்புமின் ஆகியவற்றை கண்டறிய உதவும் சலப்பரிசோதனை
- குருதியமுக்க மதிப்பீடு
- குருதிக் கொலஸ்ரோல் அளவு மதிப்பீடு ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

சரியான முறையில் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்படாத நீரிழிவு நோயினால்

- இதயம் மற்றும் குருதிக் கலன்கள்
- கண்கள்
- சிறுநீரகங்கள்
- மூளை நரம்புகள்
- கால்கள் ஆகியவை பாதிப்பிற்குள்ளாகின்றன.

எனவே இவ் அங்கவீனம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு பாதிப்புக்கள் ஆரம்பத்திலேயே கண்டறியப்பட வேண்டும்.

**முக்கியமாக**

நீரிழிவு நோயுள்ளவர்கள் சிபாரிசு செய்யப்பட்ட உணவு மற்றும் சிகிச்சை மூலம் குருதிக் குளுக்கோஸ் அளவினை சாதாரண நிலையில் பேண முடியும்.

- குருதிக் குளுக்கோஸ் சாதாரணமாகக் காணப்படுவது நீரிழிவு நோய் குணமடைந்து விட்டதைக் குறிக்காது.
- குருதிக் குளுக்கோஸ் சாதாரண நிலையில் காணப்பட்டாலும் அவர்கள் சிபாரிசு செய்யப்பட்ட உணவினையும் சிகிச்சையையும் பின்பற்ற வேண்டும்.
- வைத்தியரின் ஆலோசனையின்றி நீரிழிவு நோய்சிகிச்சையை நிறுத்தக் கூடாது.

ஆகவே நாம் எல்லோரும் ஒன்றிணைந்து நீரிழிவுநோய் எமது சமூகத்தில் ஏற்படுவதை தடுப்போம். நீரிழிவு நோய் அற்ற சமுதாயத்தை உருவாக்க முன்வர வேண்டும்.

**கோ.நந்தகுமார்**
விரிவுரையாளர்,
தாதியர் பயிற்சிக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



பிரித்தானியாவில் இயங்கி வரும் லிட்டில் எயிட் நிறுவனத்தால் யா/ ஒஸ்மானியா முஸ்லிம் பாடசாலையின் நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட லிட்டில் எயிட் நிறுவனத்தின் ஸ்தாபகரும் திட்ட இணைப்பாளருமான டறின் கொண்ஸ்டன்ரைன் நூல் நிலையத்தை திறந்து வைப்பதையும் மாணவர்களுக்கு கற்றலுக்கான கல்வி உபகரணங்களை வழங்குவதையும் மற்றும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# தமிழனைப் பற்றி பேசும் உரிமை ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு

## ஐ.தே.க.எம்.பி யோகராஜன் ஆதங்கம்

(கொழும்பு)

அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் வெளிநாடுகளுக்குச் சென்று இனப்பிரச்சினை தொடர்பாக கருத்து சொல்வதற்கு உரிமை இருப்பதைப் போல தமிழ் தலைவர்களுக்கும் தங்கள் பக்கத்து நியாயத்தை எடுத்துச் சொல்வதற்கு உள்ள உரிமையை பந்தம் பிடிப்பதாக கருதுவது அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் இனவாத கூற்றாகும்.

தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் புரிந்து கொள்ளாமல் அடி நுனி தெரியாமல் பேசும் இனவாதிகளுக்கு அரசாங்கம் தாராளமாக இடமளித்து வருவதால் இனப்பிரச்சினைக்கே தள்ளப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் தெரிவித்துள்ளார்.

அமைச்சரும் ஜாதிகஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ள கருத்துக்கு கண்டனம் தெரிவித்தே மேற்படி கருத்தினை யோகராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடகிழக்கு தமிழ் மக்களும் மலையக தமிழ் மக்களும் இனவாதிகளின் பேச்சுக்களாலும் செயற்பாடுகளினாலும் இம்சிக்கப்படுவதை உலகம் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ரீதியில் தமிழ் தலைவர்கள் செயற்படுவது பந்தம் பிடிக்கும் செயலாகாது.

சுதந்திர இலங்கையில் ஜனநாயக உரிமைகளை தமிழர்களிடம் இருந்து சிறிது சிறிதாக பறித்துக் கொண்டிருக்கும் இனவாத சக்திகளின் செல்வாக்கு அரசாங்கத்திடம் தேவைக்கு அதிகமாகவே காணப்படுகின்றது.தமிழர்கள் மீது வலுக்கட்டாயமாக மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கும் காணி பறிப்புகளுக்கும் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கமோ எண்ணமோ இந்த அரசாங்கத்திடம் இல்லை என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறுவதை எவரும் தவறாக எண்ணக்கூடாது.

தமிழர்களின் மீது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை சிங்கள மக்களுக்கு எதிரான செயலாக சித்திரிப்பதில் இணைந்த சக்திகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக அக்கறையாக இருக்கின்றார்கள்.

தமிழர்களின் வாழ்க்கையை சீரழித்தவர்கள் இன்று தமிழரின் எழுச்சியைக் கண்டு அச்சமடைந்துள்ளார்கள். இலங்கையில் நிலவும் இனவாதத்தை, பழி வாங்கல்களை மறைப்பதற்கும் மறுப்பதற்கும் முயற்சிப்பது அரசியில் கபடத்தனமாகும்.

இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பற்றி பேசும் உரிமை ஒவ்வொரு தமிழனுக்கும் உள்ளது. தமிழன் இந்த நாட்டில் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் தமது சமூகத்திற்காக குரல் கொடுப்பதை கொச்சைப்படுத்தக்கூடாது.

அமெரிக்காவுக்கு சென்றுள்ள தமிழ் தலைவர்கள் லண்டனுக்கு மட்டுமல்ல மேலும் அவுஸ்திரேலியா, ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கும் சென்று தமிழர்களின் நிலைப்பாட்டை தெளிவு படுத்தவேண்டும்.

யுதத்தத்தை முடித்து விட்டதாக கூறும் அரசாங்கம் தமிழர்களின் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தயங்குவதேன். சிங்கள சமூகத்தவரையும் இலங்கை தமிழரையும் ஏமாற்றுவதற்கு முயற்சிக்கும் அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்ற முயற்சிப்பது பெரும் சிக்கலையே உருவாக்கும்.

தேசிய இனப்பிரச்சினையை சர்வதேசமயப்படுத்துவது அவசியமாகும். உள்நாட்டில் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதற்கு இனவாத சக்திகள் இடமளிக்காத பட்சத்தில் தொடர்ந்தும் தமிழர்கள் அடிமைகளாகவும் உரிமைகளை இழந்தவர்களாகவும் வாழ முடியாது.

இலங்கையின் இந்த செயற்பாடுகளுக்கு ஆதரவாக பேசும் நாடுகளை பாராட்டுபவர்கள் இந்த செயற்பாடுகளையும் இனப்படு கொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் கண்டிக்கும் நாடுகள் மீது கோபப்படுவது அரசியல் அறியாமையேயாகும்.

சர்வதேச நாடுகளை பகைத்துக் கொள்வதால் இலங்கைக்கு பாதிப்பே ஏற்படும் என்பதை தெரிந்து கொண்டே அரசாங்கமும் அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் சிறுபிள்ளைத்தனமாக பேசுவதிலும் செயற்படுவதிலும் அதீத அக்கறை காட்டுகிறார்கள்.

இலங்கை தமிழர்களின் நிலைப்பாட்டை சர்வதேசத்திற்கு எடுத்துச் சொல்லும் ஜனநாயக உரிமைக்கு தடை விதிக்க எவருக்கும் முடியாது. உண்மையான தகவல்களை வெளியிடுவது இனவாதமும் அல்ல துரோகமும் அல்ல என்பதை அமைச்சர் சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் புரிந்து கொள்வது நல்லது என அவர் மேலும் தெரிவித்தார்.(அ-2)

## விழிப்புணர்வு நிகழ்வு

(மருதங்கேணி)

உலக நீரிழிவு தினத்தையொட்டி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினரால் விழிப்புணர்வு நிகழ்வொன்று நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வானது மேற்படி வைத்தியசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகி நடைபவனியாக மந்திகை சந்தியை அடையவுள்ளது.

பின்னர் அங்கிருந்து கந்தமுருகேசனார் சிலையடி சந்திக்குச் சென்று மீண்டும் ஆதார வைத்தியசாலையை வந்தடையவுள்ளது.

(அ-2-35)

## இளைஞரை கடத்தி கொலை செய்தவர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இளைஞர் ஒருவரை கடத்திச் சென்று கொடூரமான முறையில் கொலை செய்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கொழும்பு வடக்கு மோசடி தடுப்பு பிரிவினர் உட்பட 10 பொலிஸாரை தொடர்ந்தும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் தீப்தி கொடித்துவக்கு கடந்த 11 ஆம் திகதி உத்தரவிட்டார்.

அன்றைய தினம் சந்தேக நபர்களை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார். கொழும்பு வாழைத்துதோட்டம் பிரதேசத்தை சேர்ந்த களு துஷார என்ற ஜயசூரிய ஆராச்சிலாகே காமினி துஷார என்ற இளைஞர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இந்த 10 பொலிஸார் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் உப பொலிஸ் பரிசோதகர் ,சார்ஜன்ட், 7 பொலிஸ் சிப்பாய்கள், ஒரு சாரதி ஆகியோர் அடங்குகின்றனர். இவர்கள் கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், தெமட்டகொட, கிராண்ட்பாஸ் துறைமுகம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் பணியாற்றி வந்தவர்கள் என குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (அ-2)

## தூக்கிலிடும் பதவிக்காக பெண்களும் விண்ணப்பிக்கலாம்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் குற்றவாளிகளை தூக்கிலிடும் அலுக்கோசு பதவிக்காக இரண்டு வெற்றிடங்கள் உள்ளதாகவும் இப்பதவிக்காக பெண்களும் விண்ணப்பிக்கலாம் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை சிறைச்சாலைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவித்தலில் இந்த பதவிக்காக விண்ணப்பிப்போர் உடல் ரீதியாக தகுதியை பெற்றிருக்க வேண்டும் எனவும் ஏனைய தகுதிகள் முக்கியமல்ல என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பதவிக்காக விண்ணப்பிப்போர் 8 ஆம் தரத்தில் கல்விகற்றிருக்க வேண்டும் என்றும் இந்த பதவிக்கு நியமனம் பெறுவோருக்கு 13 ஆயிரம் வரை சம்பளம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் தொடர்பான விளம்பரம் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை ஏற்கனவே இப்பதவிக்காக 100 பேர் வரை விண்ணப்பித்த போதும் அநேகமானோர் உரிய தகைமையை கொண்டிருக்கவில்லை என்றும் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.(அ-2)

## போலி ஆவணங்களை சமர்ப்பித்து விசா பெற முயற்சித்த இருவர் கைதாகினர்

பிரித்தானியாவுக்கு செல்வதற்கென போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து விசா பெற முயற்சித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ளபிரித்தானியஎல்லைமுகவர் நிலைய குற்ற விசாரணை திணைக்களத்தினர் இவ்விருவரையும் கைது செய்துள்ளனர்.

போலியான தகவல்களைச் சமர்ப்பித்தால் எதிர்வரும் 10 வருடங்களுக்கு பிரித்தானியா செல்ல முடியாது என்பதுடன் சட்ட நடவடிக்கைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டிவரும் என்றும் தூதரகம் அறிவித்துள்ளது.

சட்ட விதிகளை மீறி பிரித்தானியாவுக்குள் செல்வதற்கு யாரையும் அனுமதிக்கப் போவதில்லை.

சட்ட விதிகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரித்தானிய எல்லை முகவர் நிலையத்தின் பணிப்பாளர் கிளயாரி முர்வே தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய விசாவுக்கு விண்ணப்பிப்பவர்கள் போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் போலி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து பிரித்தானிய விசாவைப் பெற முயன்ற இலங்கையர் இருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

## சவுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு நெருக்கடி

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் இலங்கைப் பணியாளர்கள் சிலர் தங்களின் நிலை குறித்து அதிகாரிகள் இதுவரை கவனம் செலுத்தவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் ஊடாக கடந்த 15 ஆம் திகதி சவுதியின் ரியாத்தில் தொழில் புரிவதற்காக சென்ற இலங்கை பணியாளர் குழுவில் 19 பேர் அடங்குகின்றனர்.

உரிய உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படாததால் கடும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாக இலங்கைப் பணியாளர்களில் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்கவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்த இலங்கைப் பணியாளர்கள் குறித்து தேடிப் பார்க்குமாறு சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். (அ)

## பாரதவின் நெருங்கிய சகா நாட்டைவிட்டு வெளியேற முடிவு

### அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் நெருங்கிய சகா ஒருவர் நாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொட்டிகாவத்தை மற்றும் முல்லேரியா பிரதேசசபையின் தலைவரும் பாரதவின் நெருங்கிய சகாவுமான பிரசன்ன சோலங்காரச்சியே இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.


சோலங்காரச்சியின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் இதனால் அரசியலிலிருந்து ஒதுங்கி நாட்டை விட்டு வெளியேறிச் செல்ல உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சோலங்காரச்சி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டிருந்த சோலங்காரச்சியின் நான்கு ஆதரவாளர்கள் மோதல் சம்பவத்தில் உயிரிழந்தனர். சோலங்காரச்சியின் உறவினர்கள் அரசியலிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறிச் செல்லுமாறு வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# ஆப்கான் பிரதமருடன் மன்மோகன் சந்திப்பு

## ஆப்கான் நிலைமை குறித்து விவாதிப்பு



ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், நேபாள பிரதமர் பாபாராம் பட்டாராய் ஆகியோரை பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்து கலந்து ரையாடிள்ளார்.

மாலைதீவின் அட்டு நகரில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டில் நிறைவு நாளான நேற்று மன்தினம் இச்சந்திப்பு நடைபெற்றது. போரில் இருந்து மீண்டு வரும் ஆப்கானிஸ்தானில் நிலவிவரும் சூழ்நிலைகள் குறித்து இருதலைவர்களும் முக்கியமாக விவாதித்ததாகத் தெரிகிறது. இந்த சந்திப்புக்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய ஹமீத் கர்சாய், போருக்குப் பின் ஆப்கானிஸ்தானுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முதல் நாடு இந்தியாதான். ஆப்கானிஸ்தான் வளர்ச்சிக்கு இந்தியா பல்வேறு வகைகளில் உதவியுள்ளது. இரு நாடுகளிடையே எப்போதும் நல்லுறவு நிலவி வருகிறது. ஆப்கானிஸ்தானில் மிக நெருங்கிய நட்பு நாடு இந்தியா என்று தெரிவித்தார்.

நேபாளத்துடன் விரைவில் ஒப்பந்தம், இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பாக மன்மோகன் சிங்குடன் பேசியதாக நேபாள பிரதமர் பாபாராம் பட்டாராய் தெரிவித்தார். முன்னதாக 3 வாரங்களுக்கு பட்டாராய் இந்தி யாவுக்கு பயணம் மேற் கொண்டார். அப்போதும் இந்த குழப்பத்துக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்பட்ட வரும் முயற்சிகள் குறித்து மன்மோகன்சிங்குடன் விளக்கினேன். அவர் அதற்கு வரவேற்பு தெரிவித்தார்.

இரு நாடுகள் இடையே விரைவில் இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் என்றும் மன்மோகன் உறுதியளித்தார் என கூறினார். (அ-2)

# முறைப்படி ஆலோசிக்காமல் மாநிலங்களைப் பிரிக்கமுடியாது

## அத்வானி தெரிவிப்பு

ஜெய்ப்பூர் முறைப்படி ஆலோசிக்காமல் மாநிலங்களைப் பிரிக்கக்கூடாது என பாரதிய ஜனதா மூத்ததலைவர் அத்வானி தெரிவித்தார்.

ஊழலுக்கு எதிராக இரத யாத்திரை மேற்கொண்டுள்ள அத்வானி,ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் நிருபர்களிடம் கூறியதாவது, உத்தரப்பிரதேசத்தை நான்காக பிரிக்கவேண்டுமென மாயாவதி சொல்கிறார். முறைப்படி கலந்தாலோசிக்காமல் இதுபோன்ற நடவடிக்கையில் இறங்கக்கூடாது.ஏற்கனவே உத்தரப்பிரதேசத்திலிருந்து உத்தரகண்ட் மாநிலம் பிரிக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஆட்சியில் இருந்தபோது உத்தரகண்டம், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மாநிலங்களை உருவாக்கினோம். நீண்டகால கோரிக்கை என்பதால் இந்த மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. இதே போல தெலுங்கானா மாநிலம் கடந்த 25 ஆண்டுகளாக கோரப்பட்டு வருகிறது. தெலுங்கானா கோரிக்கை சமீபகாலமாக வலுத்துள்ளது. இதனால் ஆந்திராவில் சகஜ வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சோனியா மௌனம் சாதிப்பது ஏன், ஊழல் குறித்த விடயங்கள் எங்கு பார்த்தாலும் ஒலிக்கின்றன. தி.மு.க அமைச்சர்கள், பிரதமர் மற்றும் மூத்த அமைச்சர்களின் ஒப்புதல் பெற்று சில செயல்களைச் செய்துள்ளனர்.

ஆனால், மூத்த அமைச்சர்கள் மீது மட்டும் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வெறும் பேச்சால் மட்டும் ஊழலை ஒழிக்கமுடியாது என சோனியா தெரிவித்துள்ளார். அவரது கருத்தை ஏற்றுக்கொள்கின்றேன். அதிக அதிகாரம் வாய்ந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் என்ற முறையில் ஊழலைத்தடுக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள். இந்த விடயத்தில் சோனியா மௌனம் சாதிப்பதை தவிர்க்கவேண்டும்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் ஒப்புதல் அழித்த மூத்த காங்கிரஸ் அமைச்சரையும் பொதுநலவாய நாடுகளின் ஊழலில் சம்பந்தப்பட்ட மாநில முதல்வரையும் பாதுகாப்பது வெட்டகக்கேடானது. இந்த விடயத்தில் சோனியா மௌனம் சாதிப்பது மட்டுமல்ல செயலற்ற தலைவராக உள்ளார். எனவே, சோனியா தன்னுடைய பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. இதற்கு அவர் பதில் சொல்லியே ஆக வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

# பாரதச் செய்திகள்

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை சிறையில் சந்தித்தார் ஜெத்மலானி

(வேலூர்)

ராஜீவ் கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் வேலூர் ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை மூத்த சட்டத்தரணி ராம் ஜெத்மலானி மற்றும் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் சந்தித்து பேசினர்.

சந்திப்புக்குப்பின் நிருபர்களிடம் பேசிய அவர், ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்காக தான் வாதாடுவதாகவும் ஆனால், இதுவரை அவர்களை தான் பாத்ததில்லை என்பதால் தற்போது அவர்களை சந்திக்க வேலூர் வந்ததாகவும் கூறினார். சிறையில் அவர்களை சந்தித்த போது தாங்கள் நிரபராதிகள் என மூவரும் கூறியதாகவும் தெரிவித்தார். மேலும் 2ஜி வழக்கில் கனிமொழியை ஏன் இன்னும் சிறையில் வைத்துள்ளனர் என்பது தனக்கு தெரியவில்லை என்றும் ராம்ஜெத்மலானி கூறினார். (அ-2)

# தமிழக அரசைக் கண்டித்து சிறை நிரப்பு போராட்டம்- ஸ்டாலின் சூளுரை

(கடலூர்)

அ.தி.மு.க அரசைக் கண்டித்து சிறை நிரப்பு போராட்டம் நடத்தப்படும் என்று முன்னாள் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் கடலூரில் தெரிவித்தார்.

நிலம் பறிப்பு புகார் தொடர்பான வழக்கில் முன்னாள் அமைச்சர் பொன்முடி கைது செய்யப்பட்டு கடலூர் மத்திய சிறையில் இருக்கிறார். அவரை நேற்று முன்தினம் மு.க. ஸ்டாலின் சந்தித்துப் பேசினார்.

பின்னர் சிறை வளாகத்தில் செய்தியாளர்களிடம் கூறியது, புதிய தலைமைச் செயலகத்தை மருத்துவமனையாக மாற்றுவேன், உலகத்தில் 2 ஆவது பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகத்தை குழந்தைகள் மருத்துவமனையாக மாற்றுவேன் என்று பல்வேறு அறிவிப்புகளை முதல்வர் ஜெயல லிதா வெளியிட்டு வருகிறார்.

போயஸ் தோட்டத்தையும் மனநல மருத்துவமனையாக மாற்றி அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. தி.மு.க ஆட்சியில் கருணாநிதி செயற்படுத்திய மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றை அடியோடு நிறுத்தி விட்டார். துக்லக் ஆட்சியைப் போல் பல அறிவிப்புக்களை வெளியிட்டு வருகிறார். ஹிட்லர் ஆட்சிபோல் 12ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களை பணி நீக்கம் செய்துஉத்தரவிட்டு உள்ளார்.



அவர்களின் குடும்பங்கள் கண்ணீரும் கம்பளையுமாக உள்ளன. கடந்த முறை மக்கள் நலப்பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டபோது 70பேர் தற்கொலை செய்து கொண்டனர். மீண்டும் அந்த அவலம் உருவாகும் நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள் நீதிமன்றத்தை நாடியுள்ளனர். எல்லோருக்கும் எதிர்காலத்தில் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை நிறைய உள்ளது. இந்த ஆட்சியின் அவலங்களைக் கண்டித்து பலரும் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

தி.மு.க இளைஞரணி சார்பில் நாளை மறுதினம் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது. அதைத் தொடர்ந்து கட்சித் தலைமையின் அனுமதி பெற்றுஉண்ணாவிரதம், சிறை நிரப்புப் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்த ஆலோசித்து வருகிறோம் என்றார். (அ-2)

# மன்மோகன்- கிலானி சந்திப்பு; அமெரிக்கா வரவேற்பு

(வோஷிங்டன்)

மாலைதீவில் நடைபெறும் சார்க் மாநாட்டின்போது இந்தியா, பாகிஸ்தான் பிரதமர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையை அமெரிக்கா வரவேற்றுள்ளது.


இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மார்க் டொனர் தெரிவித்துள்ளதாவது, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையை அமெரிக்கா எப்போதுமே ஆதரிக்கும். இதை பலமுறை கூறியுள்ளோம்.

இரு நாடுகளுக்கும் இடையே ஏற்படும் பொருளாதார ஒத்துழைப்புக்கள் அந்தப் பிராந்தியத்துக்கு நன்மை ஏற்படுத்தும்.

இது அந்த பிராந்தியத்துக்கே கிடைக்கும் வெற்றியாக அமையும் என்றார்.

பிரதமர் மன்மோகன் சிங்கும் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானியும் கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது இரு நாடுகளின் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுதும் நேரம் வந்து விட்டது என மன்மோகன் சிங் தெரிவித்தார். (அ-2)

# இந்தியாவில் நீரிழிவு நோயால் 51 இலட்சம் பேர் வரை பாதிப்பு



உலக நீரிழிவு தினம் நாளை திங்கட்கிழமை கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவில் நிரிழிவு நோயால் 51 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையொட்டி விழிப்புணர்வை ஏற்படுத்த மத்திய சுகாதார அமைச்சகமும் நீரிழிவுநோய் தடுப்பு அமைப்பும் முடிவு செய்துள்ளன. அதன்படி உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலை நீல நிறத்தில் ஒளிரூட்ட முடிவு செய்துள்ளது.

நீரிழிவு நோயின் உலக அடையாள சின்னம் நீலநிற வட்டம் ஆகும். இதனால் இன்று மட்டும் ஒளி மூலம் தாஜ்மஹாலை நீல நிறத்தில் ஒளிரச் செய்யப்படுகிறது. இதற்கு இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி அமைப்பு அனுமதி வழங்கி உள்ளது.

நீரிழிவு நோய் விழிப்புணர்வுக்காக தாஜ மஹால் நீல நிறத்தில் ஒளிரச் செய்யப்படுகிறது. இதேபோல பாரம்பரியமிக்க ஆக்ரா கோட்டை, பதேபுர் சிக்ரி ஆகியவை நீல நிறத்தில் ஒளிரூட்டப்படுகிறது.

தொல்பொருள் ஆராய்ச்சி அமைப்பு பாரம்பரியமிக்க 3கட்டடங்களக்கு நீல நிறத்தில் ஒளிரச் செய்ய அனுமதித்தது இதுவே முதல் முறையாகும். (அ-2)

# முன்னாள் ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் உபயோகித்த கடிகார்ம் ஏல விற்பனைக்கு

(புதுடில்லி)


முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் உபயோகித்த கடிகாரம் ஏலத்தில் விடப்படவுள்ளது. சுவிட்சர்லாந்தை சேர்ந்த ஏல நிறுவனம் ஒன்று இந்த கடிகாரத்தை ஏலத்தில் விட முடிவு செய்துள்ளது.

சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசு தலைவராக பதவி வகித்தார் டாக்டர் ராஜேந்திரபிரசாத். இவர் ரோலக்ஸ் நிறுவனம் தயாரித்த கடிகாரத்தை பயன்படுத்தி வந்தார். தற்போது இந்த கடிகாரம் ஏலத்தில் விடப்பட முடிவானது.கடிகாரம் ஏலத்தில் விடப்பட்டுள்ளது குறித்து கேள்விப்பட்ட இந்திய அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ஏலம் விடப் படுவது இன்று ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேலும் புதுடில்லியில் உள்ள இந்திய கலாசாரத்துறை சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள இந்திய தூதரை தொடர்பு கொண்டு கடிகாரம் மீட்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக கூறப்படுகிறது. (அ-2)

# ஆசிய- பசுபிக் நாடுகளுடனான உறவை மேம்படுத்துவோம்

## ஹிலாரி தெரிவிப்பு



இந்தியா, இந்தோனேசியா உள்ளிட்ட ஆசிய பசுபிக் நாடுகளுடனான உறவை மேம்படுத்துவோம் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் கூறியுள்ளார்.

ஹவாயின் ஹோனலுலுவில் நடைபெற்ற கிழக்கு, மேற்கு மையக் கருத்தரங்கில் அவர் உரையாற்றுகையில், ஆசிய - பசுபிக் பகுதியில் உள்ள நாடுகளுடன் உறவை வலுப்படுத்த அமெரிக்கா முயற்சி மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் இந்தியாவின் கிழக்கு நோக்கியப் பார்வை என்ற கொள்கையை நாங்கள் ஆதரிக்கின்றோம்.

இந்தியா, இந்தோனேசியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, மலேசியா, மங்கோலியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுடன் உறவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக உலகின் முக்கியமான ஜனநாயக நாடுகளான இந்தியா, இந்தோசேியா ஆகியவற்றுடன் வலுவான பயனுள்ள நட்பை உருவாக்க விரும்புகிறோம்.

உலகின் பாதி மக்கள்தொகை ஆசிய கண்டத்தில் உள்ள நிலையில் இங்குள்ள பல நாடுகள் வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வருகின்றன. அதேசமயம் இயற்கை பேரழிவு, அணு ஆயுதப் பரவல் உள்ளிட்ட பிரச்சினைகளையும் சந்தித்து வருகின்றன்.

21 ஆம் நூற்றாண்டில் ஆசிய- பசுபிக் பகுதி பொருளாதார ரீதியில் கேந்திர முக்கியத்துவமானதாகத் திகழும். எனவே, இப்பகுதிகளில் உள்ள நாடுகளுடனான உறவை மேம்படுத்த பாதுகாப்பு மற்றும் இராணுவ ரீதியான உடன்பாடு, முதலீட்டை அதிகரித்தல், தூதரக ரீதியான உறவை வலுப்படுத்தல், ஜனநாயகம், மனித உரிமை ஆகியவற்றை பரவலாக்குதல் உள்ளிட்ட திட்டங்களை மேற்கொள்ள ஒபாமா நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

அடுத்த வாரம் ஹோனலுலுவில் நடைபெறவுள்ள ஆசிய- பசுபிக் நாடுகளின் தலைவர் கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பங்கேற்கிறார். இக்கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி கலந்து கொள்வது இதுவே முதல் முறையாகும் என்றார் ஹிலாரி.

சீனாவின் ஆதிக்கத்தில் உள்ள திபெத்தியர்கள் விடுதலைக்காகப் போராடி வருவது குறித்து ஹிலாரி கிளின்டன் கூறுகையில்,

வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் சீனாவை வரவேற்கிறேன். அதேசமயம் சீனா பின்பற்றும் மனித உரிமை மற்றும் பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றம் தேவை.

சீனாவை எதிர்த்து திபெத்தியர்கள் தீக்குளித்து உயிரிழக்கின்றனர். வழக்குரைஞர் சென் குவாங்செங் தொடர்ந்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏற்றுமதியை அதிக ரிப்பதற்காக சீனாவின் நாணயமான யுவான் மதிப்பை செயற்கையாக குறைத்து வைத்தி ருப்பதாகவும் தெரிய வருகின்றது. சீனாவின் இத்தகைய கொள்கைகளில் மாற்றம் தேவை என்பதை தொடர்ந்து வலியுறுத்துவோம் என்றார்.

(அ-2)

## உலங்குவானூர்தி விபத்தில் 8 பேர் பலி

மெக்சிக்கோ நாட்டின் உள்துறை மந்திரியாக இருந்தவர் பிரான்சிஸ்கோ பிளாக் மோரா வயது(45).இவர் மெக்சிக்கோ நகரில் இருந்து குயர்னாவாகாவில் நடந்த ஒரு கூட்டத்தில் பங்கேற்க உலங்குவானூர்தியில் புறப்பட்டுச் சென்றார்.

அவருடன் மேலும் 7பேர் இருந்தனர். அவர் பயணம் செய்த உலங்குவானூர்தி ஷோசி மில்கோ பகுதியில் சென்றபோது மலைப் பகுதியில் விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. அதில் மந்திரி பிரான்சிஸ்கோ பிளேக்மோர் உடல் கருகி பலியானார்.

மேலும் அவருடன் பயணம் செய்த 7 பேரும் உயிரிழந்தனர்.தகவல் அறிந்ததும் மெக்சிக்கோ ஜனாதிபதி கால்டெரான் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தார். விபத்துக்கு மோசமான தட்பவெப்பநிலைதான் காரணம் எனத் தெரிகிறது.

உலங்குவானூர்தி விபத்தில் மரணமடைந்த மந்திரி பிரான்சிஸ்கோ மூத்த மந்திரியாவார். மெக்சிக்கோவில் போதைமருந்துக் கும்பலை ஒழிப்பதில் தீவிர அக்கறை காட்டி வந்தார்.

இவர் உள்துறை மந்திரியான பின்னர் போதைமருந்து கடத்தல் கும்பலின் அட்டூழியம் வெகுவாகக் குறைந்திருந்தது. மந்திரி பிரான்சிஸ்கோ பிளேக்மோராவின் மறைவுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

(அ-2)




# சோமாலியாவில் கடும் பஞ்சம் நாள்தோறும் இறக்கும் மக்கள்



சோமாலியாவில் அண்மைக்காலமாக நடைபெற்று வந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக பல இலட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக உணவு உற்பத்தி வீழ்ச்சி நிலைக்குத்தள்ளப்பட்டது.

இதனால் அகதிகள் உட்பட நாட்டின் வறுமையான பல மக்கள் உணவுப் பற்றாக்குறையால் உயிரிழந்துள்ளனர்.

இதனைத் தடுப்பதற்கு உலக சுகாதார அமைப்பு உரிய நடவடிக்கை எடுத்த போதிலும் போசாக்குப் குறைபாட்டினால் சிறுபிள்ளைகள் இறந்து போவதை முற்றாகத் தடை செய்ய முடியவில்லை.

இரண்டு மில்லியன் மக்கள் உணவுப் பற்றாக்குறைவால் கஷ்டப்படுகின்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் போசாக்குக் குறைவால் உயிர்பிழைப்பது அசாத்தியம் எனப் பெற்றோரினால் கைவிடப்பட்ட 7மாதக் குழந்தையை சுகாதார நிறுவனத்தினால் சிகிச்சை செய்து ஆரோக்கியம் பெற்ற சம்பவம் சோமாலியாவில் இடம்பெற்றதென தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபோன்று பலரும் சுகாதார நிறுவனத்தினால் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சோமாலியாவுக்கு மக்கள் நலன்புரி சேவைகளுக்காகப் பெறும் நிதி பற்றாக்குறையாக இருக்கின்றதென தெரிவிக்கப்படுகின்றன.

சோமாலியாவின் பஞ்சம் கூடியவரை குறைக்கப்பட்டாலும் மக்கள் இன்னும் உணவுப் பற்றாக்குறைவால் நாள்தோறும் இறப்பை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகிறது.

(அ-2)

# வெள்ளை மாளிகை அருகே துப்பாக்கிச்சூடு

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் வெள்ளைமாளிகை அருகே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வெள்ளைமாளிகை அருகே இரு கார்களில் வந்த கும்பல் ஏகே-47 துப்பாக்கிகளால் சுட்டதாகவும் இதையடுத்து அந்தக் கார்களை விரட்டிச்சென்ற உளவுப் பிரிவினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிகவுயர்ந்த பாதுகாப்பு மிகுந்த வெள்ளை மாளிகை அருகே இந்தச் சம்பவம் நடந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு ஹொண்டா சிற்றி கார் மடக்கப்பட்டு அதிலிருந்து ஒரு ஏகே 47துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து வோஷிங்டன் டிசியின் முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு அதிகபட்ச நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இரவு 10 மணியளவில் பென்சில்வேனியா அவெனியூ பகுதியிலிருந்து 2 கார்களை உளவுப் பிரிவினரின் கார்கள் லிங்கன் மெமோரியல் வரை விரட்டிக் கொண்டு சென்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாரும் கைது செய்யப்பட்டார்களா, இதில் யாரும் காயமடைந்தார்களா? என்பது தெரியவில்லை.

ஹவாய் தீவுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ஒபாமா நேற்று முன்தினம் வோஷிங்டனில் இல்லாதபோது இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

(அ-2)



வியட்நாம் சென்றிருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன், ஹோனேலூ நகரில் அந்நாட்டு ஜனாதிபதி ட்ரோங் டெங்சாங்கை சந்தித்து உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# யுனெஸ்கோ அமைப்பில் பாலஸ்தீனத்தை சேர்த்ததால் நிதி உதவிகள் இரத்து

## அமெரிக்கா தெரிவிப்பு

யுனெஸ்கோ அமைப்பில் பாலஸ்தீனத்தைச் சேர்த்ததால் அமெரிக்கா வழங்கி வந்த நிதியுதவியை நிறுத்திவிட்டது. அதனால் யுனெஸ்கோவின் பல்வேறு திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஐ.நா. வின் கல்வி, அறிவியல், கலாசார ஒத்துழைப்புக்கான அமைப்பு யுனெஸ்கோ இந்த அமைப்பில் கடந்த மாதம் பாலஸ்தீனம் சேர்க்கப்பட்டது.

இதற்கு அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. மேலும் யுனெஸ்கோவுக்கு வழங்கி வந்த நிதியுதவியை இருநாடுகளும் நிறுத்திவிட்டன. இதனால் பல்வேறு நாடுகளில் யுனெஸ்கோ செயற்படுத்தி வரும் திட்டங்களை தொடர்ந்து செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் யுனெஸ்கோ தூதர்கள் கூட்டம் பாரிசில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பேசிய இயக்குநர் ஜெனரல் இரினா பொகோவா, யுனெஸ்கோவின் திட்டங்களுக்கு ஆண்டுதோறும் இறுதியில் நிதியுதவி வழங்கும் பாலஸ்தீனத்தை சேர்த்ததால் இந்த ஆண்டு வழங்க வேண்டிய நிதியை அமெரிக்கா நிறுத்திவிட்டது.

அதனால் நிதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, யுனெஸ்கோவின் பல்வேறு திட்டங்கள் இந்த ஆண்டு இறுதி வரை நிறுத்தி வைக்கப்படுகின்றன என்றார்.

(அ-2)

விதைப்பதைவிட அறுப்பதே மீதி என்பது அறுவடையின் விதி. ஒரு செயலை விதைப்பதால் ஒரு பழக்கம் அறுவடையாகும். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எந்த இளைஞர்கள் இனி எழுந்து வருவர்

அன்புக்குரிய தமிழ் இளைஞர்களுக்கு வணக்கம்! இவ்விடத்தில் முன்பும் பல தடவைகள் கடிதம் எழுதிய ஞாபகம் உண்டு.

மீண்டும் ஒரு தடவை இந்தக் கடிதத்தை வரைகின்றேன். இக்கடிதம் எழுதும்போது எம் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொள்கின்றன.

30 ஆண்டுகள் போர் நடந்த பூமியிது. போர் என்பதன் அடுத்த பக்கம் விடுதலைப் போராட்டம் என்பதாக இருக்கும்.

அந்தப் போராட்டத்தின் முடிபு, உயிரிழப்பு, சொத்தழிவு, வேதனை, சோதனை என்பதாக முடிந்து போனது என்றே நினைத்துக் கொண்டோம்.

ஆனால் போரின் முடிபு தமிழ் இனத்தின் ஆணி வேரை உக்கவைத்து கிளை, இலை, பூ, காய் கனி என எல்லாவற்றையும் உதிர வைத்து விடப்போகின்றது என்பதை இப்போது உணரும் போது, இதை எழுதும் காகிதாதிகளும் நனைந்து கொள்கின்றன.

எங்களை நாங்கள் அறிய முன்னதாக விடுதலைப் போராட்டத்தை நடத்தி முடித்து விட்டோமா? அல்லது விடுதலைப் போராட்ட காலத்தில் எங்கள் இளம் சமூகத்தின் மீதான கட்டுப்பாடுகள் ஓர் அடக்குமுறையின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டு விட்டனவா? அல்லது எங்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பின் மத்தியில் வாழ்வுக்கான விருப்பை முழுமையாக இழந்து விட்டோமா? எதுவுமே புரியவில்லை. அன்புக்குரிய தமிழ் இளைஞர்களே, உங்களின் பொறுப்பற்ற போக்கு, எங்கள் மாணவர் கைளில் ஹெரோயினைக் கையளித்துள்ளது.

உங்களின் அக்கறையற்ற தன்மை, பாலியல் வியாதிகளை பரப்பி வருகிறது.

நீங்களோ! மதுபானசாலைகளில் குந்தியிருந்து குடித்து பகுத்தறிவைத் தொலைத்து பாழாகிப் போகாதீர்கள்.

வெளிநாடுகளில் உள்ள எங்கள் உறவுகள் உங்களை நினைத்து உறக்கமின்றி வியர்வை சிந்தி தங்கள் உழைப்பை இங்கு அனுப்ப, நீங்களோ குடித்த சாராயப் போத்தலை வீதியில் போட்டுடைத்து விட்டுப் போவதென்றால் எப்படி எம்மினம் விடிவு பெறுவது!

உன் தந்தை, உன் தம்பியை ஊரெல்லாம் கொண்டு திரிந்து ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வைத்து கல்லூரியில் சேர்த்துவிட்டு காப்பாற்றுவான் என்று காத்திருக்க, அவனோ ஹெரோயினுடன் அலைந்து திரிகிறான்.

என்ன செய்வது! எங்கள் இனம் இப்படியில்லை என்று சொல்ல இனி எந்த இளைஞர்கள் எழுந்து வரப் போகிறார்கள்.

எங்கள் அரசியல்வாதிகள் தேர்தலுக்காய் அடுப்பு மூட்டுகிறார்கள். பொது அமைப்புகள் தங்கள் இருப்புக்காக அறிக்கை விடுகின்றன.

பல்கலைக்கழக மாணவர்களோ மதுக்கடையில் பைலா போடுகிறார்கள்.

பெற்று வளர்த்த தமிழ் அன்னை குந்தியிருந்து கண்ணீர் விடுகிறாள். ஓ இறைவா! நீயுமா ஊக்கம் கொடுக்கிறாய்.

# போர் மேகங்கள் கலைந்துவிட்டாலும் போதைமேகங்கள் தொடர்கின்றன

போர் மேகங்கள் சூழ்ந்து பொலிவற்று இருந்த காலங்கள் மாறினாலும் தமிழ்மகனின் தலைவிதி இன்னும் மாறவில்லை. பள்ளிப்பருவம் மாறும் முன்பே துள்ளித் திரியும் காலங்கள் இன்றைய இளைஞர்களில் துவண்டு போகின்றன. போதைப் பாவை எம் மாணவர் சமூகத்தில் தலைதூக்க ஆரம்பித்துவிட்டது.

இது சாதாரண போதையல்ல. வாழ்வியலை வலுவிழக்க வைக்கும் ஹெரோயின் வரை போய் விட்டது. யாழ். பிரபல பாடசாலைகள் மத்தியில் கண்டறியப்பட்ட விடயங்களை நினைக்கும்போது நெஞ்சம் வெடிக்கின்றது. கண்டறியப்படாத விடயங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ? சுற்றுச் சிந்தித்துப் பாருங்கள் வேதனையின் விளிம்பில் எமது மாணவர் சமூகம் ஊஞ்சலாடுகின்றது.

எதிர்கால சந்ததியை இவ்வாறு ஏங்க விட்டால் எமது சந்ததியின் சரித்திரத்திற்கு சாவுமணி கிடைக்காதா? இது சாதாரண விடயமல்ல. 18 வயதை தாண்டும் முன்பு செய்கின்ற தவறுகளிற்கு பலர் பதில் சொல்ல வேண்டும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், அரசாங்க சமூக கட்டமைப்பாளர்கள், பெரியோர்கள், சமூக சேவையாளர்கள், பத்திரிகையாளர்கள் என பலர் இக்குறையினை தீர்க்க முன்வர வேண்டும். இவ்வாறு பல கட்டமைப்புக்கள் பங்கெடுக்கும் போது தான் இதற்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

அவ்வாறானால் எப்படி இதை குறைப்பது, மேலும் பல பிஞ்சுகள் அடிமை ஆகாது எப்படித் தடுப்பது, எதிர்கால சந்ததியை எப்படி வாழவைப்பது என்று ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

போதை என்றால் என்ன? அதன் பக்க விளைவுகள் என்ன? பொருளாதார பாதிப்பு என்ன? உயிரோடு இருந்தும் உணர்வற்ற ஜடங்களாகப் போகும் நிலை என்ன? என்பது பற்றிய விழிப்புணர்வு செயற்பாடுகளை மாணவர்கள் மத்தியில் ஒரு துருவத்தில் முன்னெடுக்க வேண்டி உள்ளது. இதனால் சகபாடி கொண்டாட்ட உந்துதல்களினால் பின்னணி தெரியாமல் பிணமாக போகும் பிஞ்சுகளை பாதுகாக்க முடியும்.

மறுதுருவத்தில் நோக்குகின்றபோது தன் நிலை தெரியாமல் நிழலாடும் மாணவர் பருவத்தில் நியாயங்களை உணர்த்துவது பெருமளவு வெற்றியளிக்காது. அர்ப்ப சந்தோஷங்களை விரும்பும் ஒரு மனதிற்கு அடிமையாகி போன உணர்வுக்கு ஆலோசனை பொருத்தமற்றது. ஆகவே, இணைபாடவிதமான செயற்பாடுகளாகிய கலைத்திட்டம் தவிர்ந்த மாணவர்களின் விருப்போடு கூடிய கலைநிகழ்ச்சிகள், பெரு விளையாட்டுக்கள், போட்டிகள் என பாடசாலை உட்பட்ட பல சமூக அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இது இன்றைய இக்கட்டான சூழ்நிலை காரணமாக சாதாரண நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அப்பால் அதிகளவு மெருகூட்டப்பட வேண்டும். இவ்வாறான பல நிகழ்ச்சிகள் மாணவர்கள் மீது திணிக்கப்படும் போது பயிற்சிகளில் ஈடுபடுதல், ஒத்திகை பார்த்தல், போட்டிக்கான ஒழுங்கமைப்புக்களை செய்தல் என நேரத்தை விரயமாக்கும் போது ஓய்வு நேர சகபாடி கொண்டாட்டங்களை குறைத்து ஒருமுகப்பட்ட சிந்தனைகளை வளர்க்க முடியும்.

மனித சிந்தனை நடத்தை என்ற பண்புசார் அம்சத்தை உடனடியாக மாற்ற முடியாது. அதனை அளக்க முடியாது. அதனால் காலவோட்டத்தில் விகிதாசார அடிப்படையில் மாற்றம் ஏற்படுவது திண்ணம்.

எமது சமூகத்தில் பல சேவையாளர்களினால் பல சேவைகள் இடம்பெற்றாலும் கூட சமூகக் கட்டமைப்பின் இதயத்துடிப்பாக இருக்கின்ற மனங்களுக்கு சேவை செய்யும் சேவையாளர்கள் குறைவு. பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் பகுதி இருந்தும்கூட பூரணமாக இடம்பெறுகின்றதா என்பது கேள்விக்குரியது.

சமூகத்திற்கு, எமது சமூகத்தின் மாணவர்களிற்கு தூர சிந்தனை, தொலை நோக்கு பார்வை என்பன குறுகி விட்டன. இது இதற்கான வேறு ஒரு காரணமாக அமையலாம். சுயமாக சிந்திக்கின்ற தன்மை, சகபாடி, நீரோட்டத்தில் செல்லாது விளைவுகளை விரிவாக சிந்திக்கின்ற தன்மை வளர்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

போகிறது போகிறது எல்லாமே போகிறது என்ற சிந்தனையை விடுத்து எங்கள் சந்ததியை மீட்க நடவடிக்கை எடுங்கள் .சாவு மணி எமக்கு கேட்காது.

ஆர்.கே.மேனன்
ஆசிரியர்,
யா/கொழும்புத்துறை இ.ம.வி.

# வாழ்வை வளப்படுத்தவும் , நம்பிக்கைக்கு உரியவராய் வாழ்வதற்கும் பயிற்சி பெறுவோம்

இயேசு கடவுளின் ஆட்சியை ஒப்பிட்டு பல உருவகக்கதைகள் கூறியிருக்கிறார். அவர் கூறிய இக்கதைகளுள் தாலந்து கதை சிறப்பானது எனலாம். தாலந்து மதிப்பு மிக்க பொன், வெள்ளி மற்றும் வெண்கல உலோக மதிப்புகளாக அன்று இருந்தன. ஒரு தாலந்து 15 வருட ஊதியத்திற்கு சமம் என அன்று கூறப்பட்டது. தலைவர் ஒருவர் அவரவர் திறமைக்கு ஏற்ப ஒருவருக்கு 5 தாலந்தும் வேறொருவனுக்கு 2 தாலந்தும் இன்னொருவருக்கு ஒரு தாலந்தும் கொடுத்துவிட்டு நெடும் பயம் மேற்கொண்டார்.

அப்படியானால் பணக்குவியலை பணப்புதையலை அத்தலைவர் மூன்று பேருக்கும் கொடுத்து செல்கிறார். இருவர் உழைத்து மேலும் சேர்த்து தலை

## பரமபிதா காட்டிய பாதை

வர் வந்ததும் அவரிடம் அனைத்தையும் ஒப்படைக்கின்றனர். அப்போது என் மகிழ்ச்சியில் நீங்களும் வந்து பங்கு கொள்ளுங்கள் என தலைவர் அழைக்கின்றார். ஒருவர் மட்டும் தலைவர் வரும் வரை காத்திருந்து எவ்வித உழைப்பும் மேற்கொள்ளாது புதைத்து வைத்திருக்கின்றார். தலைவரிடம் ஐயா நீர் கடின உள்ளத்தினர். நீர் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவர் நீர் தூவாத இடத்திலும் விளைச்சலை சேகரிப்பவர் என்பதை அறிவேன். உம்முடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்.

அதற்கு அவருடைய தலைவர் சோம்பேறி பொல்லாத பயனற்ற இந்தப்பணியாளர்களை புறம்பேயுள்ள இருளில் தள்ளுங்கள் என்று கூறித்தண்டிக்கிறார்.


இந்தக் கதையில் இருவிதமான மனநிலைகளை எடுத்துக்காட்டுகின்றன. ஒன்று பணியாளர்கள் பணத்தைப்பெருக்கும் மனநிலை தலைவனின் பாராட்டைப்பெற உழைக்கும் பணியாளர்கள் உழைக்கமனமில்லாமல் வாழ்வதோடு அதற்கான பொறுப்பையும் பிறர் மேல் சுமத்துகின்ற மனநிலை தலைவரின் கோபத்திற்கு ஆளாகும் மனநிலை. உழைத்தஇருவர் உயர்த்தப்படுகின்றனர். பலன் கொடுத்தவர்கள் பலனை பெறுகின்றனர்.

இந்தக்கதையில் காலம் பொன்னானது. காத்திருக்கும் போதும் உழைக்க வேண்டும் என்பது தான் சிறப்புச் செய்தி. அடுத்தவனைக் குறைசொல்லுகிறவன் அதிலும் பணம் பொருள் உதவிகள் கொடுக்கும் ஒருவரையே குறை சொல்பவன் வேலையைச் செய்யமாட்டான். குறுக்குவழி ஏதாவது உண்டா என்று பார்ப்பான். பயன்படுத்தாத செல்வம் பாழாய்ப்போகும் என்னும் உண்மையை இக்கதை நமக்குக் கற்றுத் தருகின்றது.

வெவ்வேறு அளவில் தாலந்தைப் பெற்றவர்கள் மேலும் செல்வம் சேர்த்தார்கள். ஆனால் ஒருவர் மட்டும் தாலந்தைப் பயன்படுத்தாமல் நிலத்தில் புதைத்து வைத்தார். அவர் தாம் பெற்ற பணத்தை நன்முறையில் முடக்கி மேலும் அதிக பணம் திரட்ட முன்வரவில்லை. விதைத்துப் பெருக்க வேண்டிய பணத்தை பொருளை, திறமையை மண்ணுக்குள் புதைத்து மக்கிப்போகவைத்தது மகா தவறு.

உழைக்காதவன், அடுத்தவனைக் குறைசொல்பவன், குறுக்குவழியில் சம்பாதிக்க நினைப்பவன், கிடைத்ததையும் பயன்படுத்தத் தெரியாதவன், கிடைத்ததைக் கொடுப்பவன், உள்ளதையும் இழந்து தண்டனையும் பெறுவது சரியானதே.

கடவுள் வழங்குகின்ற மகிழ்ச்சி நம் உள்ளத்தை நிரப்ப வேண்டும். அவரோடு ஆழ்ந்த உறவை வளர்க வழிகாட்ட வேண்டும். கடவுள் நம்மைத் தேடி வந்து தம் அன்புப் பிணைப்பில் நம்மை அணைத்துக் கொள்வதால் நாம் மகிழ்ச்சியில் திழைக்கின்றோம். எனவே, கடவுளின் ஆட்சியில் பங்கேற்கவிழைவோர் பொறுப்போடு செயல்பட வேண்டும்.



இவ்வுலகில் நாம் வாழும் காலம் சொற்பமே. நாம் பெற்ற செல்வத்தையும் நேரத்தையும் திறமைகளையும் நாம் நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும் என்னும் உண்மையை இந்த கதை வழியாக உணர்த்தப்படுகின்றது.

எனவே, எந்த நல்லகுணத்தை நாம் வெளிப்படுத்தவில்லை. எந்த முயற்சியை நாம் எடுக்காமல் இருக்கின்றோம்.

நாம் பெற்ற கொடைகளை நன்முறையில் பயன்படுத்தி பலன்கொடுக்க உலகம் உயர்ந்திட நாம் உழைக்க வேண்டும் என்பதே எமக்கு இக்கதை விடுகின்ற அழைப்பாகும். வாழ்வை வளப்படுத்தவும் நம்பிக்கைக்குரியவராய் வாழவும் பயிற்சி பெறுவோம்.

ம. பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# வளர்ந்துவரும் நாடுகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும்

## அரசாங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுத்துறை குழு வளர்ந்து வரும் நாடுகள் குறித்து அவ்தானம் செலுத்த வேண்டும் என இலங்கை வலியுறுத்தியுள்ளது.

2018 ஆம் ஆண்டின் பொதுநலவாய போட்டிகளை இலங்கையில் நடத்தும் வாய்ப்பை இழந்ததன் பின்னர் இந்த அறிப்பை விடுத்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அவுஸ்திரேலியாவில் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

2018 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய போட்டிகளை நடத்துவதற்கான வாக்கெடுப்பு மேற்கிந்திய தீவுகளின் கிட்ஸ் தீவில் இடம்பெற்றது.

இதில் இலங்கையின் அம்பாந்தோட்டையை தோற்கடித்து அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் அந்த வாய்ப்பை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# தவறவிடப்பட்ட சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள புதிய நடைமுறை

(சாவகச்சேரி)

கடந்த காலங்களில் க.பொ.த. சாதாரணதர, க.பொ.த.உயர்தரப்பரீட்சைகளில் கிடைக்கப்பெற்ற சான்றிதழ்களை தவறவிட்டோர் அதனை மீளப்பெற்றுக்கொள்ளும் வகையில் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்குறித்த சான்றிதழ்களை பெறவேண்டுமாயின் முகவரி, தொலைபேசிஇலக்கம், பரீட்சையின் பெயர், பரீட்சைக்கு தோற்றிய வருடம், பாடசாலை வலயம், சுட்டெண் (இருப்பின்) ஆகியவற்றை தபால் மூலமாயின் சட்டமுகாமையாளர், இலங்கைச்சட்ட உதவி ஆணைக்குழு, ஹல்ஸ் ரொப் வீதி, கொழும்பு 12 அல்லது கொழும்பு (Lac @ Gmail. Com) என்ற இணையத்தள முகவரிக்கும் அனுப்பிவைக்க முடியும். அத்துடன் இடது பக்க மூலையில் சான்றிதழ் மீளப்பெறுதல் எனக்குறிப்பிடும் படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 0113137 153 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

(அ-3-29)

# கஷ்டப் பிரதேச மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு மற்றுமொரு திட்டம்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் கஷ்டப்பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களின் அறிவு விருத்தி மற்றும் கல்வி மேம்பாட்டுக்கான தேசியத் திட்டத்தின் மற்றுமொரு கட்டம் வட பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இந்தத் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை வித்தியானந்தா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்படஉள்ளதாக ஜனாதிபதி சமூக அபிவிருத்தி விவகாரங்களுக்கான பிரிவு குறிப்பிடுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவான மெய்யறிவையும் சிறந்த பண்புகளையும் மேம்படுத்தலுக்காக சிசு திரிய தேசிய திட்டத்தின் கீழ் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த பிரிவின் பணிப்பாளர் நந்தன விஜேசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவியேற்பின் விசேட நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 500 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

மோதல்கள் இடம்பெற்ற மற்றும் கஷ்டப் பிரதேசங்களைச் சேர்ந்த யுத்தம் காரணமாக உளநல பாதிப்புக்களுக்கு இலக்கான நிலையிலும் கல்வி செயற்பாடுகள் தடைப்பட்டுள்ள நிலையிலும் இருக்கின்ற சாதாரண தர மற்றும் உயர்தர பிரிவுகளில் கற்கின்ற சகல இன மாணவர்களினதும் கல்வியை மீள தொடர்வதற்கான திட்டங்கள் இதன்மூலம் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-2)

# இளைஞர் பாராளுமன்ற வெற்றிடத்தை நிரப்ப முடிவு

## தேசிய இளைஞர் மன்றம்

இளையோர் பாராளுமன்றத்தில் நிலவுகின்ற 18 உறுப்பினர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தெரிவிக்கின்றது.

இளையோர் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவானதையடுத்து இந்த வெற்றிடங்கள் தோன்றியுள்ளதாக மன்றத்தின் தலைவர் லலித்பியும் பெரேரா குறிப்பிட்டார்.

இளையோர் பாராளுமன்ற யாப்பின் பிரகாரம் இரண்டாம் நிலையிலுள்ள வேட்பாளர்களை உறுப்பினர்களாக நியமிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் அடுத்த கூட்டத் தொடரிலிருந்து புதிய உறுப்பினர்கள் இளையோர் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்க முடியும் என தேசிய இளையோர் சேவைகள் மன்றத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதனால் நாளை மறுதினம் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எதிர்வரும் 17,19 ஆம் திகதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும், எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமையும் மற்றும் 18, 20 ஆம் திகதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# பூநகரியில் மீன்பிடிக்க வலைவீசிய நபர் குழியில் தவறிவீழ்ந்து மரணம்

(கொழும்பு)

பன்கட்டி தோட்டம் அப்புத்தளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் குளத்தில் மீன்பிடிப்பதற்கு வலைவீசியபோது குளத்தில் உள்ள குழி ஒன்றில் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் பூநகரி முக்கொம்பன் குளத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பெரியசாமி இராசேந்திரன் (வயது-46) என்னும் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார். இவரது மரண விசாரணையை டாக்டர் க. திருலோகமூர்த்தி மேற்கொண்டார். முக்கொம்பன் குளக்கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த குறித்தநபர் மதியபோசனநேரம் சக தொழிலாளர்களுடன் குறித்த குளத்தில் மீன்பிடிக்க வலை வீசியபோதே தவறுண்டு நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்துள்ளார். பின்னர் இராணுவத்தினரின் உதவியுடன் பூநகரி அரச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது வழியில் உயிரிழந்துள்ளதாக சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் மனைவியான பெருந்தோட்ட தொழிலாளி திருமதி தனலட்சுமி (வயது 40).ஒப்பந்தகாரரும் அநுராதபுரவாசியுமான வன்னிநாயக்க முதியன்சலக பண்டாரநாயக்க(வயது 57), அப்புத்தளைவாசியும் சக தொழிலாளியுமான மதிவீரன் குமார் (வயது 32) ஆகியோரே சாட்சியமளித்தவர்களாவார்.பூநகரி பொலிஸார் சாட்சிகளை ஆஜர் செய்திருந்தனர். (அ-2)

# நீரிழிவு தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவானது குடாநாடு தழுவிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை நாளை திங்கட்கிழமை நடத்தவுள்ளது.

இதற்கமைய பாடசாலைதோறும் சிறார்களுக்கு நீரிழிவு தடுப்பு சம்பந்தமான அறிவூட்டல் நிகழ்வுகள் பொது நிறுவனங்களில் நோயின் தாக்கத்தை குறைப்பது சம்பந்தமாக பொதுமக்களை அறிவூட்டல், இலவச குருதிப் பரிசோதனை, வியாபார நிறுவனங்களில் இந்நோய் தொடர்பான விளக்கம் வைத்தியசாலைகளின் சுற்றாடல்கள்தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபயணங்கள் ஆகியன இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளை முன்னெடுக்க விரும்பும் பாடசாலைகள், பொது நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள் என்பன யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தை அணுகுவதன் மூலம் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது 021222 0175 என்ற தொலைபேசி இலக்கத்தினை அழைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமென தெரி விக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஜனாதிபதியின் பிறந்ததின நிகழ்வுகள் மினுவாங்கொடையில்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூன்றாவது வருட பதவிக்காலம் ஆரம்பமாவதை முன்னிட்டு அவரது 65 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தெயட்ட செவன தேசிய மரநடுகை வேலைத்திட்டம் மினுவாங்கொடை பிரதேசத்திலும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் மினுவாங்கொடை பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பொலிஸ் நிலையத்திலும் நகர சபையிலும் தபாற் கந்தோர் மற்றும் பிரதான பாடசாலைகளிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை மரநடுகை வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கவுள்ளன.

மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கம்பஹா மாவட்ட எம்.பி. உறுப்பினர் லயன் ஜயசிங்க, மினுவாங்கொடை நகரசபைத் தலைவர் பற்றிக் அழகக்கோன், பிரதேசசபைத் தலைவர் குமார அரங்கல்ல, பிரதேச சபை உறுப்பினர் எம்.எம்.எம்.சுஹைதர், பிரதேசசெயலாளர் கம்மம்பில உள்ளிட்ட மற்றும் பல பிரமுகர்கள் நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# மன்னார் சுவர்ணபுரி கிராமத்துக்கு 50 ஆண்டுகளின் பின் மின்விநியோகம்

(கொழும்பு)

கடந்த 50 வருடகாலமாக மின்சாரமின்றி காணப்பட்ட மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுவர்ணபுரி மீள்குடியேற்ற கிராமத்துக்கான மின் விநியோகத் திட்டத்தை கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இப்பிரதேசத்தில் வாழ்ந்துவரும் மக்கள் மின்சாரமின்றி இருந்து வந்தனர். குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இக்கிராமம் இருந்தமையால் எவ்வித அபிவிருத்திகளுமின்றி காணப்பட்டது.

அமைச்சர் றிசாட் பதியூதீன் எடுத்துக் கொண்ட முயற்சியின் பலனாக சுவர்ணபுரி கிராம மின் விநியோக திட்டத்திற்கு வடக்கின் வசந்தத்தின் மூலமாக 12 மில்லியன் ரூபாகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இம்மின்சார திட்டத்தின் மூலம் சுமார் 350 தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்கள் நன்மையடைகின்றனர். இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

# ரோஜர் பெடரர் 800வது வெற்றி

(பாரிஸ்)

பிரான்சின் பாரிஸ் நகரில் நடந்து வரும் டென்னிஸ் போட்டி காலிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6:3, 7:5 என்ற நேர் செட்டில் ஆர்ஜென்டினாவின் யுவான் மொனாக்கோவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

இந்த ஆட்டம் வெறும் 90 நிமிடம் மட்டுமே நடந்தது. பெடரருக்கு இது 800ஆவது வெற்றியாகும். இந்த பருவ காலத்தில் மட்டும் அவர் 57 வெற்றிகளை பெற்றுள்ளார்.

800 ஆட்டங்களில் வெற்றி பெறும் 7 ஆவது வீரர் பெடரர் ஆவார். இரட்டையர் பிரிவில் ரோகன் போபண்ணா (இந்தியா)- குரேஷி (பாகிஸ்தான்) ஜோடி 3:6, 6:4, 10:6 என்ற செட் கணக்கில் போராடி மைக்கல் லோட்ரா(பிரான்ஸ்) - நீனத் சிம்மோன்ஜிக் (செர்பியா) ஜோடியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

# இணைப்பாட்ட சாதனை ஜோடிகள்

கிரிக்கெட் போட்டிகளில் இணைப்பாட்டம் மிகவும் முக்கியம். சிறந்த வீரர்கள் ஒன்று சேர்ந்துவிட்டால், எளிதாக ஓட்டங்கள் குவிக்கலாம். இந்தியாவைப் பொறுத்தவரை சச்சின் -டிராவிட் தொடர்ந்து அசத்துகின்றனர். இவர்கள் டெஸ்ட் அரங்கில் அதிகமுறை 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்த ஜோடிகள் வரிசையில், முன்னிலை வகிக்கின்றனர்.

இதுவரை 136 இன்னிங்சில் ஜோடி சேர்ந்த இவர்கள் 19 முறை, 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்துள்ளனர். 27 முறை, 50 முதல் 99 வரை ஓட்டங்கள் சேர்த்துள்ளனர். அதிகபட்சமாக 249 ஓட்டங்கள் சேர்த்துள்ளனர்.

ஆறுமுறை ஆட்டமிழக்காமல் இருந்த இவர்கள், மொத்தம் 6 ஆயிரத்து 600 ஓட்டங்கள் சேர்த்துள்ளனர்.

▬ இதேபோல் கங்குலியுடன் ஜோடி சேர்ந்த சச்சின், 71 இன்னிங்ஸில் 12 முறை, 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்துள்ளனர். லக்ஸ்மனுடன் ஜோடி சேர்ந்த டிராவிட், 83 இன்னிங்ஸில் 11 முறை, 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்துள்ளனர்.

**சச்சின் -கங்குலி முன்னிலை**

ஒரு நாள் போட்டியரங்கில், 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்த ஜோடிகள் வரிசையில் இந்தியாவின் கங்குலி -சச்சின் ஜோடி முன்னிலை வகிக்கின்றது.

இதுவரை 176 போட்டிகளில் 26முறை, 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்களைச் சேர்த்துள்ளனர்.

29 முறை, 50 முதல் 99 வரை ஓட்டங்களைச் சேர்த்துள்ளனர். அதிகபட்சமாக 258 ஓட்டங்களைச் சேர்த்துள்ளனர்.

மூன்று முறை ஆட்டமிழக்காமல் இருந்த இவர்கள், மொத்தம் 8 ஆயிரத்து 227 ஓட்டங்கள் எடுத்துள்ளனர்.

▬ இதேபோல் சேவாக்குடன் ஜோடி சேர்ந்த சச்சின், 110 போட்டியில் 13 முறை, 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்களைச் சேர்த்துள்ளனர். டிராவிட்டுடன் ஜோடி சேர்ந்த கங்குலி, 88 போட்டியில் 11 முறை ,100 அல்லது அதற்குமேல் ஓட்டங்கள் சேர்த்துள்ளனர்.

சச்சின்-டிராவிட் ஜோடி 98 போட்டியில் 11 முறை 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்துள்ளது.

**சாதனை வீரர்கள்**

தனிப்பட்ட முறையிலும் சச்சின், டிராவிட் சாதித்துள்ளனர்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்களை கடந்து சாதித்துள்ளனர். சச்சின் இதுவரை 182 டெஸ்டில் 51 சதம் உட்பட 15 ஆயிரத்து 48 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

453 ஒரு நாள் போட்டிகளில் 48 சதம் உட்பட 18 ஆயிரத்து 111 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

ட்ராவிட் 158 டெஸ்டில் 35 சதம் உட்பட 12 ஆயிரத்து 860 ஓட்டங்களை எடுத்துள் ளார்.

344 ஒருநாள் போட்டிகளில் 12 சதம் உட்பட 10 ஆயிரத்து 889 ஓட்டங்களை குவித்துள்ளார்.

# இந்திய வீரர் அஸ்வின் இன்று திருமண பந்தத்தில் இணைகிறார்



இந்திய கிரிக்கெட் அணியில் முன்னணி சுழற்பந்து வீரராக தமிழகத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் அஸ்வின் இடம்பெற்றுள்ளார். டெஸ்ட்அணியில் அவருக்கு முதல்முறையாக வாய்ப்பு கிடைத்தது. இதை சரியாக பயன்படுத்திக் கொண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் முத்திரை பதித்தார். தனது அறிமுக டெஸ்டிலே அவர் ஒன்பது விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

சென்னையைச் சேர்ந்த 25 வயதான அஸ்வினுக்கு ஐ.பி.எல். போட்டியின்போது திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருந்தது. பாடசாலைத் தோழி பிரீத்தியுடன் அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

அஸ்வின் - பிரீத்தி திருமணம் சென்னையில் இன்று நடக்கிறது. இந்த திருமணத்தில் இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் நெருங்கிய நண்பர்கள் ஆகியோருக்கு மட்டுமே அழைப்பு அனுப்பப்பட்டு உள்ளது.

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் மோதும் 2வது டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில் நாளை ஆரம்பமாகிறது. இந்தப் போட்டி ஆரம்பமாவதற்கு ஒரு நாள் முன்பு அஸ்வின் திருமணம் செய்கிறார். திருமணம் முடிந்த அன்றே அவர் 2 ஆவது டெஸ்டில் விளையாடுவதற்காக கொல்கத்தா புறப்பட்டு செல்வார் என்று தெரிகிறது.

இந்திய வீரர்கள் கொல்கத்தாவில் இருப்பதால் இந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்கமாட்டார்கள். முன்னாள் வீரர்கள், முக்கிய பிரமுகர்கள் திருமண விழாவில் கலந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# டெஸ்ட் தரவரிசையில் சங்கக்கார முதலிடம்

(டுபாய்)



பாகிஸ்தான் அணியுடன் நடைபெற்று முடிந்த டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயற்பட்ட இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் தரப்படுத்தலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஐ.சி.சியின் புதிய தரப்படுத்தலுக்கு அமைய 880 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட குமார் சங்கக்கார டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தலில் முன்னிலையில் திகழ்கின்றார்.

இந்த தரப்படுத்தலில் 873 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட தென்னாபிரிக்க வீரர் ஜக்கலிஸ் இரண்டாமிடத்திலும், 823 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணியின் தலைவர் அலிஸ்டயர் குக் மூன்றாம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 806 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்தில் காணப்படுகின்றார்.

அத்துடன் இங்கிலாந்தின் 4 வீரர்களும், தென்னாபிரிக்காவின் 3 வீரர்களும், இலங்கை, இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணியின் ஒவ்வொரு வீரரும் முதல் 10 இடங்களிற்குள்ளும் இடம்பிடித்துள்ளனர்.

# அமீருக்கு பிணை மறுப்பு



(லண்டன்)

சூதாட்டம் தொடர்பாக பாகிஸ்தான் வீரர் முகமெட் அமீருக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந் நிலையில் அவர் பிணை கேட்டு லண்டன் நீதிமன்றத்தில் மனு செய்தார்.

இதை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அதேவேளையில் தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய அமீருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

# அவுஸ்திரேலியாவுக்கு ஜனாதிபதி வாழ்த்து




(கொழும்பு)

2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்த அவுஸ்திரேலியாவுக்கு வாய்ப்புக் கிட்டியதையிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை இலங்கையில் நடத்த பாரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

மேலும் அவுஸ்திரேலியாவில் 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை வீர, வீராங்களைகள் நாட்டுக்குப் பெருமையும் கௌரவத்தையும் தேடித்தர வேண்டும் என ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஆணைக்குழுவில்....

காணாமல் போயுள்ளதாகவும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்த பூங்கோதை தனக்கு நியாயம் வழங்குமாறு கோரியிருந்தார்.

இது தொடர்பாக விசாரிப்பதற்காக குற்றப் புலனாய்வுத் துறையினர் தன்னை கொழும்பிலுள்ள விசாரணை மையத்தின் 4ஆம் மாடிக்கு எதிர்வரும் 25ஆம் திகதி வருமாறு கல்முனை பொலிஸ் ஊடாக அழைத்துள்ளதாக இவர் கூறுகிறார்.

தன்து பாதுகாப்பு மற்றும் குடும்ப பொருளாதார நிலைமையை சுட்டிக்காட்டி கொழும்பிற்கு செல்ல முடியாத நிலை பற்றி தான் ஆணைக்குழுவிடம் தெரிவித்தபோது, கல்முனையிலேயே இந்த விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்துதருவதாக ஆணைக்குழு பதிலளித்ததாக அவர் கூறுகிறார்.

கல்முனையில் இந்த விசாரணை நடைபெறும்போது மனித உரிமை அமைப்பின் பிரதிநிதியொருவர் அல்லது சட்டத்தரணி ஒருவர் முன்னிலையிலேயே இந்த விசாரணை நடைபெற வேண்டும் என தான் விரும்புவதாக அவர் தெரிவிக்கிறார்.

2007ஆம் ஆண்டிற்கு முன்னர் முந்தைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலங்களில் தனது இரு சகோதரர்கள் காணாமல்போனதாகவும் ஒரு சகோதரி பாலியல் வன்முறைக்கு இலக்காகி மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தனது கணவன் சுற்றி வளைப்பில் கைதாகி சடலம் கூட கிடைக்கவில்லை என்றும் இவர் தெரிவிக்கிறார்.

ஆனால் 2007ஆம் ஆண்டிற்கு பின்னர் தனக்கும் தனது குடும்பத்திற்கும் எதிராக இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவே தான் ஆணைக்குழுவிடம் நியாயம் கோருவதாக அவர்தெரிவிக்கிறார். (ச-5)

# சொன்னதை சொன்னோம்....

எனவே எம்மை ஏன் துரோகியாக நினைக்கிறார்கள் என்று எனக்கு விளங்கவில்லை.

அரசாங்கமும் கரிசனைக்குரிய விவகாரங்கள் குறித்து வெளிநாட்டு அரசாங்கங்களுடனும் அனைத்துலக சபைகளிலும் கலந்துரையாடுகிறது. அவ்வாறாயின் அதுவும் கூட துரோகமா?

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து அறிந்து கொள்வதில் அமெரிக்க அதிகாரிகள் அக்கறை காட்டினர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகள் குழு வடக்கு கிழக்கின் மனிதாபிமான பிரச்சினைகள், அரசியல் நல்லிணக்க முயற்சிகள் குறித்து அவர்களுடன் கலந்துரையாடியது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் கிலாரி கிளின்டனுடனான சந்திப்பு எமது நிகழ்ச்சி நிரலில் இருக்கவில்லை.

ராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பின் பேரிலேயே நாம் அங்கு சென்றோம். நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ததும் அவர்களே.

லண்டனில் தெற்காசிய மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான வெளி விவகாரச் செயலர் அலஸ்டயர் பேர்ட் மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துப் பேசினோம்.

அமெரிக்காவில் இருந்தபோது ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனைச் சந்திக்க முயன்றோம். நவம்பர் முதலாம் நாள் பிற்பகல் 3.30 மணியளவில் சந்திப்புக்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் அவசரமான வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டதால் பான் கீ மூன் அந்தச் சந்திப்பைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

நியூயோர்க்கில் ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் லைன் பாஸ்கோவையும் ஏனைய ஐ.நா. அதிகாரிகளையும் சந்தித்தோம்.

டிசம்பர் மாத நடுப்பகுதிக்குள் அரசியல் தீர்வு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டை எட்டுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 10, 15 தடவைகள் மட்டுமல்ல, தேவைப்பட்டால் 20 தடவைகள் கூட சந்திக்கத் தயாராக இருக்கிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-5)

TILKO JAFFNA CITY HOTEL
70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com
Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers
*Await Opening*
*Special Barbaque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*
உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள்,திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...
இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...
மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.





உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...
T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive


# போர்க் குற்றம் புரிந்தோரை...

என்டிரிவியின் கேள்விகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அளித்த பதில்கள் வருமாறு,

**என்டிரிவி :** இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுகின்றனரே இது குறித்து உங்கள் நடவடிக்கை என்ன?

**ஜனாதிபதி :** மீனவர் பிரச்சினை குறித்து நாம் உங்கள் பிரதமருக்கு (மன்மோகன் சிங்கிற்கு) விளக்கமளித்துள்ளேன்.

கடந்த வருடம் மாத்திரம் 40 ஆயிரம் இந்திய மீன்பிடி படகுகள் எமது இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசித்துள்ளன. அது எங்களுக்கு பாரியப்பிரச்சினை.

ஆனால் நாங்கள் எவரையும் கைது செய்யவில்லை. காரணம் பிரதமரின் கோரிக்கைதான். நாங்கள் அவர்களை அனுமதித்தோம். முன்னர் கடற்படையினர் அதனை அவதானித்தனர்.

ஆனால் கடற்படையினர் எமது அறிவித்தலின் பின் அதனை நிறுத்தியுள்ளனர். இப்போது நாம் அவர்களை அனுமதிக்கிறோம்.

**என்டிரிவி :** மீனவர் பிரச்சினை இந்தியாவில் பாரிய அரசியல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது?

**ஜனாதிபதி :** ஆம், யாழ்ப்பாணத் தமிழர்கள் மீள்குடியேற்றப்பட்டார்களா? அவர்கள் நல்ல நிலையில் உள்ளார்களா? தீயநிலையில் உள்ளார்களா? நாம் அவர்களுக்கு உதவி செய்கிறோமா? என்றெல்லாம் அவர்கள் (இந்திய அரசியல்வாதிகள்) கேட்கின்றனர்.

எனவே ஏன் மீனவர்களுக்கு அவர்கள் உதவி செய்யக் கூடாது? அவர்கள் அவர்கள் உடைய உரிமைகளையே பின்தள்ளுகின்றனர். எனவே இது ஒரு துரதிர்ஷ்டவசமான விடயம். எனவே அவர்கள் அதனையும் புரிந்துகொள்ள வேண்டும்.

**என்டிரிவி:** எனவே இலங்கைத் தமிழ் மீனவர்களையும் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கோருகிறீர்களா?

**ஜனாதிபதி :** இல்லை. நாங்கள் கொள்கையைக் கொடுத்து வாங்கச்சொல்கிறோம். அது குறித்து கலந்துரையாடுகிறோம். தமிழ் மீனவர்களைச் சந்திப்பது சிறந்த விடயம் என நான் கூறினேன்.

இலங்கை தமிழ் மீனவர்களை இந்தியா பக்கம் அழைத்து இந்திய மீனவர்களுடன் கலந்துரையாட வைத்தால் அவர்கள் பிரச்சினையை தீர்த்துக்கொள்வர். அரசாங்கம் இதில் தலையிடுவதை நான் விரும்பவில்லை.

**என்டிரிவி :** இலங்கையில் நல்லிணக்க முயற்சிகள் எந்த நிலையில் உள்ளன. அவை மிக மெதுவாக நகர்கின்றனவா?

**ஜனாதிபதி :** இல்லை இது இரண்டு ஆண்டுகளாக மிக வேகமாக நகருகிறது. நாங்கள் இடம்பெயர்ந்த 95 வீதமான மக்களை மீளக் குடியமர்த்தியுள்ளோம்.

**என்டிரிவி :** நாம் பேசுவது அரசியல் நல்லிணக்கம் பற்றி?

**ஜனாதிபதி :** அரசியல் ரீதியாக நாங்கள் ஏற்கெனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாடி வருகிறோம். கடந்த ஒன்றரை மாதங்களாக அவர்கள் மிகவும் வேலைபளுவுடன் இருக்கிறார்கள்.

அமெரிக்கா, பிரித்தானியாவுக்கு பயணம் செய்து பரப்புரைகள் செய்கிறார்கள். அவர்கள் எதற்காக பரப்புரை செய்கிறார்கள் என்று தனக்குத் தெரியவில்லை. ஏன் என்றால் இவை உள்நாட்டு விவகாரங்கள். அவர்கள் எம்முடன் தான், அரசாங்கத்துடன்தான் பேசவேண்டும். ஏன் என்றால் இறுதியாக அரசாங்கம்தான் எதையும் கையாளும். நாங்கள் ஒரு குழுவை அமைத்துள்ளோம். அவர்கள் இன்னமும் அதற்கான உறுப்பினர்களின் பெயர்களை அறிவிக்கவில்லை.

நாங்கள் நாடாளுமன்றத்தில் 23 அரசியல் கட்சிகளை கொண்டிருக்கிறோம். எனவே நாங்கள் ஒரு நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்க வேண்டியுள்ளது.

அதுதான் பிரச்சினையை தீர்ப்பதற்கு சிறந்த இடம். அரசாங்கமும் எதிர்க்கட்சியும் சந்திக்கும் போது ஒரு தீர்வை நிச்சயம் தருவோம்.

**என்டிரிவி :** எந்த நேரத்திலும் உங்களிடம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படலாம். அதை பகிரங்கப்படுத்துவீர்களா?

**ஜனாதிபதி :** ஆம், எதிர்வரும் 19ஆம் திகதி ஆனால் அதை நான் பெற்றுக்கொண்டு ஆராய்வேன். அது ஒரு பகிரங்க ஆவணம் அல்ல அதைப் பகிரங்கப்படுத்துவதற்கு.

நான் அதை நாடாளுமன்றத்தில் முன்வைப்பேன். அப்போது அது பகிரங்க ஆவணமாகிவிடும்.

**என்டிரிவி :** மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் அதில் இடம்பெறும் என்று நீங்கள் பயப்படுகிறீர்களா?

**ஜனாதிபதி :** அவ்வாறு குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் நாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும். நான் எவரையும் பாதுகாக்கப் போவதில்லை. நான் யாரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை.

**என்டிரிவி :** ஆக, இது ஒரு நீண்ட நடைமுறையாக இருக்கும்?

**ஜனாதிபதி :** ஆம், எல்லோரும் கடைசி பத்து நாட்கள் பற்றியே பேசுகிறார்கள். ஆனால் கடந்த 30 ஆண்டுகளைப் பற்றி யாரும் பேசுவதில்லை.

எவ்வளவு பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்? எவ்வளவு தமிழ் அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள்? உங்களின் பிரதமர் கூட கொல்லப்பட்டார்.

ஆகவே இந்த விடயங்களை மட்டும் கருத்தில் கொள்ள முடியாது. நீங்கள் அறிவீர்கள்.


(மற்றொரு செய்தி உள்ளே) (எ-5)

# பொதுநலவாய விளை...

நாம் கூறிவந்துள்ளோம். நாம் ஒன்றிணைந்து ஒரு புதிய யுகத்திற்குள் பிரவேசித்துள்ளோம். இப்பிராந்தியத்தை மீள் இளமையாக்கும் எமது வாக்குறுதியை இப்பெறுபேற்றை பொருட்படுத்தாமல் நாம் தொடர்வோம் என அவர் கூறினார்.

இதேவேளை இலங்கையின் முன்னாள் ஆசிய குறுந்தூர ஓட்ட சம்பியனும் மெய்வன்மை பயிற்றுநருமான சுனில் குணவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில், இப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ஒரு புதிய அத்தியாயமாக இருந்திருக்கும் எனத் தெரிவித்தார்.

இது முறையற்றது. அனைத்து நாடுகளுக்கும் அவை சிறியவையாகவோ வறியவையாக இருந்தாலும் ஒரு வாய்ப்பு வழங்கப்படவேண்டும். இம்முறை அவர்கள் எங்களைப் போன்ற சிறிய நாட்டுக்கு வழங்கி ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் இந்த அநீதியை ஒருவரும் எதிர்க்கவில்லை. ஆனால் இலங்கை எதிர்த்தது. எதிர்காலத்தில் இந்த நிலையை மாற்றுவது குறித்து நாம் தீவிரமாக கருத்தில் கொள்ள வேண்டும் என்றார். (எ-5)




# போதைப் பொரு...

14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு வழங்கினார்.

இந் நிலையில் விசாரணைகளின் அடிப்படையில் பாடசாலை மாணவர்களுக்கு ஹெரேயின் போதைப்பொருட்களை விநியோகித்த பிரதான முகவரை நேற்று கொட்டியில் வைத்து கைது செய்துள்ளோம்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இன்று நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார் என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (பா)


காணி விற்பனைக்கு
உரும்பிராய் சந்திக்கும் டிப்போவுக்கும் இடையில் பலாலி Main Road -ல் 2 காணிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0770204629
எந்த நாட்களாயினும் மாலை 4.00 மணிக்கு பிறகு தொடர்பு கொள்ளவும்.
(6779)






## இன்று திசைகாட்டியில்.....

தனது வசதிகளை விஸ்தரித்துக் கொண்டமையால் பின்வரும் கற்கை நெறிகளுக்குரிய புதிய பிரிவுகள் ஆரம்பித்து வைக்கப்படுகின்றன.

நேரம் : மு.ப. 11 மணி

**இதில் சமூக ஆர்வலர்கள், சமூகப் பிரமுகர்கள், சமயப் பெரியார்கள் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.**

- 7 வயதுக்குட்பட்ட மழலைகளுக்கான ஆங்கிலக் கற்கைநெறி
- சிங்களக் கற்கைநெறி (லங்காதீப நாளிதழ் நிருபர் திருமதி K.K. நனி அவர்களால் நடாத்தப்படுகின்றது)
- கனடா செல்வதற்கு தேவையான ஆங்கிலக் கற்கைநெறி (IELTS)
- ஆங்கில டிப்ளோமா

} புறெஜக்டர் (ஓடியோ, வீடியோ) வசதியுடன்

திசைகாட்டி
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9016, 021 491 4527
இணையத்தள முகவரி www.thisaikaddi.lk
(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)
(C-4963)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.